# தினக்கதிர்

வார வெளியீடு

THINAKKATHIR WEEKLY · දිනක්කතිර්

இதழ் -05 · ஜன 25 - 31, 1998 · விலை - ரு 10



பாடசாலை உபகரணங்கள்
ப்ரிசுப் பொருட்களுக்கு
நாடவேண்டிய ஒரேஸ்தாபனம்
ராஜாஸ் புத்தக நிலையம்
111.பிர்தான வீதி
மட்டக்களப்பு
T.P: 065-22371


# அரசு சமாதான கதவுகளை இறுக மூடிவிட்டது

(நமது அரசியல் நிருபர்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அரசாங்கம் முற்றாக மூடியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் மூலம் ஒருபோதும் சமாதானத்தையோ ,அமைதியையோ ஏற்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளுடன்சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தித்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பதே ஜதார்த்தமாகும் .

இந்நிலையில் புலிகள் இயக்கத்தை தடைசெய்தால் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போய்விட்டது.

முடிவில்லாத யுத்தமே நிட்சயமானது என்ற நிலை இத்தடை மூலம் ஏற்பட்டிருக்கிறது.

பௌத்த பிக்குகளையும் சிங்களப் பேரின வாதிகளையும் திருப்திப் படுத்துவதற்காக அரசாங்கம் அவசரப்பட்டு எடுத்த முடிவால் அமைதி ,சமாதானம் என்பது கானல் நீராகி விட்டது எனறே பலரும் கருதுகின்றனர்.

தமிழ் கட்சிகளும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசு தடை செய்தமை குறித்து கண்டனங்களை தெரிவித்துள்ளன.

## ஆள் மாறாட்டம் அதிகம் ஆனாலும் 18.4% வாக்குகளே அளிக்கப்பட்டன.

யாழ். குடாநாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் 26%மான வாக்குகளே அளிக்கப்பட ்டுள்ளன. யாழ். மாநகர சபையில் 14% வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டு ள்ளது.


யாழ்.மாநகர சபை யில் மொத்த வாக்காளர் களின் எண்ணிக்கை 82,667 ஆகும், அளிக்கப்பட்ட வாக்குகள் 11,697 ஆகும், செல்லுபடியான வாக்குள் 10,790 ஆகும்.

கூட்டணி 3540 வாக்குகளைப் பெற்று 9 ஆசனங்களையும், புளோட் 3182 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி, 2963 வாக்ககளைப் பெற்று 6 ஆசனங்களையும் ஈ.பி.ஆர். எல்.எவ், 942 வாக்கு களைப் பெற்று 2 ஆசனங் களையும் கைப்பற்றியுள்ளனர்.

தேர்தல் ஆள்மாறாட்டம் தாராளமாக இடம் பெற்றதாக சில கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன.




தினக்கதிர் வாசகர்களுக்கு எமது
ஈதுல்பித்ர் பெருநாள் நல்வாழ்த்துக்கள்


கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மட்டக்களப்பு காந்தி சிலை மைதானத்தில் எதிர்ப்புப் போராட்டத்தை அண்மையில் நடாத்தினர். செய்திகளும், படங்களும் 12ம் பக்கத்தில்.

## கூட்டணி போட்டி இட்ட இருசபைகளிலும் வெற்றி.

### ஈ.பி.டி.பி. 10 சபைகள், புளொட் 4 சபைகள், ரெலோ 1சபை.

யாழ். குடாநாட்டில் கடந்த வியாழன் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 10 பிரதேசசபைகளை (ஈ.பி.டி.பி.) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் 2 நகர சபைகளையும் 2 பிரதேச சபைகளையும்(புளொட்) ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனியும் யாழ். மாநகரசபையையும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் வல்வெட்டித்துறை நகர சபையை (ரெலோ) தமிழீழ விடுதலை இயக்கமும் கைப்பற்றியுள்ளன.

பலத்த போட்டி நிலவிய யாழ். மாநகரசபையை தமிழர் விடுதலைக்கூட்டணி கைப்பற்றியிருக்கிறது.

23 ஆசனங்களைக் கொண்ட யாழ். மாநகரசபையில் 9 ஆசனங்களை தமிழர் விடுதலைக் கூட்டணியும், தலா 6 ஆசனங்களை புளொட், ஈ.பி.டி.பி. ஆகியனவும் 2 ஆசனங்களை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் கைப்பற்றியுள்ளன. கூட்டணி அறுதிப்பெரும்பான்மையை யாழ். மாநகர சபையில் பெறமுடியாமல் போய்விட்டது.

நல்லூர், வேலனை, நெடுந்தீவு, ஊர்காவற்துறை, வலிகாமம் தெற்கு, வடமாராட்சி தெற்கு, வலிகாமம் மேற்கு, பருத்தித்துறை (வடமாராட்சி கிழக்கு) வலிகாமம் கிழக்கு, ஆகிய பிரதேசசபைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் (ஈ.பி.டி.பி.) கைப்பற்றியுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனி (புளொட்) பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளையும், சாவகச்சேரி பிரதேச சபை, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளையும் கைப்பற்றியுள்ளது.

தமிழர் விடுதலை இயக்கம் (ரெலோ) வல்வெட்டித்துறை நக்ர சபையை க்கைப்பற்றியுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் சுயேச்சைக்குழுவினர், எந்த ஒரு உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றவில்லை. ஆனால் இவை போட்டியிட்ட சபைகளில் சில ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

தென்மராட்சி பகுதியை புளொட் கைப்பற்றியிருக்கிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## யாழ். மேயராக சறோஜினி தெரிவானர்.



சறோஜினி

(இரா. துரைரத்தினம்)

யாழ். மாநகரசபை மேயராக சறோஜினி யோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் மனைவி சறோஜினி, யாழ்.சுண்டிக்குளி மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றியவர்.

இவரின் மாமன் டாக்டர் வெற்றிவேல், கணவன் சட்டத்தரணி, யோகேஸ்வரன் ஆகியோர் யாழ். நகரில் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாக திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைவராக தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்ட ஸ்ரீபாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீபாஸ்கரன் சமூக சேவையாளராவார். காங்கேசன்துறை தொகுதியில் தந்தை செல்வநாயகத்தை எதிர்த்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டவர்.


பல தடவைகளில் தோல்வியை தழுவிய இவர் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இப்பிரதேசம் இருந்த

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



எஸ். ஸ்ரீபாஸ்கரன்




தமிழ் பேசும் மக்களின் குரலாக தினக்கதிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர்**
வார வெளியீடு

த.பெ.இல. 06.
16, புனித மைக்கல் வீதி,
மட்டக்களப்பு.
065-23055.

உலகின் பொதுமொழி அன்பாகும்
அதை உணர்த்துவதே தமிழ் பண்பாகும்.

## சுதந்திர நாட்டின் அடிமைகள்

*சுதந்திர தின பொன்விழாவுக்கான ஏற்பாடுகள், பாது காப்புக்கள் மும்முரமாக நடைபெறுகின்றன.*

*அரச மட்டத்தில் நடைபெறும் இந்த ஏற்பாடுகளி லிருந்து சற்று தூர விலகியே மக்கள் இருக்கின்றனர்.*

*தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் இந்த சுதந்திரம் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.*

*வெள்ளையரின் நிர்வாகம் இலங்கைக்கு மாறியி ருக்கிறது. அது தவிர வேறு பெரிதாக அடிமைத்தனத் திலிருந்து மீண்டதாக சாதாரண சிங்கள மக்களும் நினைக்கவில்லை.*

*ஆனால் சுதந்திர இலங்கையில் தமிழர்களின் நிலை?*

*1956ல் காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குண்டர்களின் தாக்குதல்கள் இன்னும் தொடர்கிறது.*

*இனக்கலவரம் என்ற போர்வையில் தென் இலங்கையில் தமிழர்கள் மீது அரச அனுசரணையுடன் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது.*

*தென் இலங்கையில் தமிழர்களை விரட்டிய பயங் கரவாதம் 1972ல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராட்சி மாநாட்டில் பத்து அப்பாவி பொதுமக்களை கொன்றொழித் ததன் மூலமும் தமிழர் பிரதேசங்களிலும் புகுந்து கொண்டது*

*சுதந்திர இலங்கையில் தமிழர்கள் தமது தாய் மொழிக்கு விழா எடுப்பதற்கு கூட உரிமை இல்லை என்பதை தமிழாராட்சி மாநாட்டு தாக்குதல்கள் நிரூபித்தன.*

*இன்று ஆட்சி பீடத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசினாலேயே யாழ் தமிழாராட்சி மாநாட்டில் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது.*

*இன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவே அன்றும் பிரதமராக இருந்தார். அவரே பாதுகாப்பு அமைச் சராகவும் இருந்தார்.*

*அன்று அப்பாவித் தமிழர்கள் பத்துப்பேர் அநியாய யாயமாக கொல்லப்பட்டனர்.*

*அரசின் பாதுகாப்பு படைகளே இக்கொலையை செய்தன.*

*அது தெரிந்திருந்தும் யாழ் தமிழாராட்சி மாநாட் டில் புகுந்து தாக்குதல் நடாத்திய அரச படைகள் மீது அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.*

*மாறாக ஆசீர்வாதமே வழங்கப்பட்டது.*

*அந்த ஆசீர்வாதத்துடன் ஆரம்பமான தமிழர்கள் மீதான தாக்குதல்கள் இன்னும் தொடர்கின்றன.*

*வீட்டிலோ வீதியிலோ சுதந்திரமாக நடமாட முடி யாத நிலையே இன்று தோன்றியிருக்கிறது.*

*வீட்டில் இருந்த கோணேஸ்வரி, வீதியில் சென்ற கிருஷாந்தி,*

*சிறைச்சாலையில் கூட தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போயுள்ளது.*

*தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்ட முறையில் படுகொலைசெய்யப்பட்டனர். தமிழ்க் கைதிகள் படு கொலை செய்யப்பட்டபோது பாதுகாப்பு படைகள் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தன.*

*இது போன்ற பல்லாயிரக்கணக்கான சம்பவங்கள் இந்த நாட்டில் உள்ள தமிழர்களுக்கான சுதந்திரம் பற் றிய கேள்வியை எழுப்பியுள்ளது.*

*வெள்ளையர்கள் ஆட்சியைக் கையில் பற்றும்வரை கண்டியை தமிழ் மன்னனே ஆட்சி செய்தான்.*

*அதே கண்டியில்தான் சுதந்திர தின பொன்விழா நடைபெறுகிறது.*

*ஆனால் கண்டியிலிருந்து தமிழர்கள் வெளியேற வேண்டும் எனப் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.*

*உண்ணவும் உறங்கவும் கூட நிம்மதியின்றி தவிக் கும் தமிழர்களுக்கு என்று சுதந்திரம் கிடைக்கிறதோ அன்று சுதந்திரத்திற்கான வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வோம்.*

# நலந்தானா

*சகல விஷத்தற்கு நசியம்:*
முருங்கையிலை, அவுரி இலை, பெருங்காயம், வசம்பு, உள்ளி, மிளகு இவைகளை தட்டி ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டு நாசியிலும் காதிலும் பூசிவிட சகல விஷமும் நீங்கும்.

*நாய்க்கடிக்கு:*
நாராக்கரந்தை, நன்னாரி, செந்நாயுருவி இந்த மூன்று இலைகளையும் எள்ளும், புகையூரலும் சேர்த்து அரைத்து கடிவாயில் பூசவும். சுண்டை இலையும், உப்பும் சேர்த்து அரைத்து பூசினால் தீரும்.

*நாய், நரி, சிறுபுலி, குரங்கு, பூனை, குதிரை, முதலை, வேங்கை முதலிய பிராணிகளின் கடிவிஷத்திற்கு:*
அவுரி வேரை ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் அரைத்து பசும் பாலில் கலக்கி மூன்று நாள் கொடுத்து, இதன் வேரை அரைத்து கடிவாயிலும் பூச விஷம் தீரும். அல்லது கொல்லன் கோவை என்ற ஆகாசகருடன் கிழங்கை ஒரு கொட்டைப் பாக்கு அளவு அரைத்து வெந்நீரில் 3 நாள் கொடுத்து அதையே அரைத்து கடிவாயிலும் பூசவும்.

*எலிக்கடியால் சுவாசகாசம் கண்டால்:*
சங்கன் குப்பை, வெள்ளைக் காக்கட்டான் இவ்விரு வேர்களையும் எடுத்து சமஅளவு அரைத்து ஆவின் பாலில் கொடுத்து வரநீங்கும்.

*சிலந்தி பூச்சிகடிக்கு:*
ஆடு தீண்டாபாளை, மருள் கிழங்கு, இலவங்கப்பட்டி ஏலம் இவைகளில் ஒன்றை கொட்டைப்பாக்கு அளவு அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். பின்பு கடிவாயிலும் பூசவும்.

*வண்டு கடி விஷத்திற்கு:*
ஆடு தீண்டாபாளை வேரையாவது அல்லது பிராயம் வேரையாவது இடித்து சூர்ணம் செய்து சாப்பிட விஷம் நீங்கும்.

*சகலவிதமான எலிக் கடிகளுக்கும்:*
ஆடு தீண்டாபாளைவேல், விளாம் பட்டை, மஞ்சள் வகைக்கு 10 கிராம் அல்லது சித்திர மூலவேர், உத்தாமணிவேர், மிளகரணை வேர் வைகைக்கு 30 கிராம் எடுத்து சூர்ணம் செய்து பசும் பாலில் அரைத்முது எள்ளெண்ணெயில் கலக்கி காய்ச்சி மூன்று தடவையாக ஐந்து நாட்கள் கொடுக்கவும். உப்பு, புளி, நீக்கி பத்தியம்

*தேள்,நட்டுவாக்காலி கொட்டினால்:*
(அ) காஞ்சிரிவேல், அவுரிவேல் நாய்கொட்டான் வேர், கொன் முட்டை வேர் இவற்றை சம அளவு எடுத்து இடித்து சூர்ணம் செய்து திரிகடி பிரமாணம் வெந்நீரில் கொடுக்க நீங்கும்

சுத்தி செய்த எட்டி விதையை தாய்ப்பாலில் உரைத்து கொஞ்சம் உள்ளுக்க கொடுக்கவும், கடிவாயிலும் பூச தீரும்.

**இவ்வார பலன்**
**01.02.1998--07.02.1998**
**பாலு சோதிடர்**

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)
குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். நீண்ட காலமாக நிறைவு பெறாமல் இருந்த விடயம் நிறைவு பெறும். தொழில் உயர்வு, கல்வி, பரீட்சையில் நன்மை, விவசாயம், வியாபாரத்தில் இலாபம், தொழில் அதிபர்களுக்கு மறைமுகமான எதிரியின் தொல்லையேற்படும். நண்பர்களோடு மிகவும் அவதானமாக செயல்படவும். வார இறுதியில் நன்மையான சம்பவங்கள் நடக்கும்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4ம் பாதங்கள். ரோகினி, மிருகசீரிடம் 1.2ம்பாதங்கள்)
மேலதிகாரிகளின் உதவிகள் தடைப்படும். மனநிலைக்குழப்பத்தை உருவாக்கும். தளரக்கூடாது. விவசாயம், வியாபாரம், கல்வி. பரீட்சையில் தாமதம் ஏற்படும். திருமணம், காதல், நிறைவேறும். அயலிடத்தொடர்பு ஏற்படும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4ம் பாதங்கள். திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்,)
உறவுக்குள் பகைமை தோன்றி மறையும். அயல் நாட்டிலிருந்து மனச்சங்கடமான செய்தி கிடைக்கும். புதிய விடயங்கள் தொடங்குவது நல்லதல்ல. குழந்தைகளுக்கு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு நன்மை. வியாபாரம், தொழில், கல்வி, பரீட்சை என்பவற்றிற்குச் சிறப்பு. தொழிலில் நீண்ட காலமாக தடைப்பட்ட பதவி உயர்வுக்கு முயற்சித்தால் நன்மை ஏற்படும்.

### கடகம்

(புநர்பூசம் 4ம் பாதம். பூசம், ஆயிலியம்)
குடும்பத்திற்குள் திடீர் மனச்சோர்வு, சங்கடம் தோன்றி மறையும். தொழிலாளர், மாணவர்களுக்கு நன்மையில்லை. நோயாளிகள், உடலை மிகவும் அவதானமாக கவனித்துக் கொள்ளவும். திருமணம், காதல், நன்மையான விடயங்கள் ஆரம்பிக்கக் கூடாது. இறுதியில் சந்தோஷமும், உடற்சுகமும் ஏற்படும்.

### சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1ம்பாதம்)
பல தடவைகள் முயற்சி செய்தும் பலன் அளிக்காத நல்ல விடயச் செய்தித் தொடர்பு ஏற்பட்டுக் குடும்பத்தில் சந்தோஷம் நிலவச் செய்யும். அளவுக்கு மீறி பாசம் செலுத்துபவர்களிடம் மனக்கசப்பு ஏற்படலாம். விவசாயிகளுக்கும், வியாரிகளுக்கும் நன்மை கிடைக்கும். காதல், திருமணம், குடும்ப உறவில் சந்தோஷமும் நிலவும்.

### கன்னி

(உத்தரம்2,3,4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)
முதலீட்டாளர்கள், அறுவடை செய்பவர்கள் இலாபம் பெறுவர். தடைப்பட்ட தொடர்பு, திருமணப் பேச்சு, காதல், விவகாரம் மீண்டும் தொடரும். உறவுக்குள் இருந்த பகைமை நீங்கி சந்தோஷமும் ஏற்படும். அயல் நாட்டுப் பிரயாணம், அன்னிய இடத்துச் செய்தித் தொடர்பு அமையும். குழந்தைகளுக்கு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு நன்மை.

### துலாம்

(சித்திரை 3,4ம் பாதங்கள், சுவாதி, விசாகம், 1,2,3பாதங்கள்)
புதுமுயற்சி நடவடிக்கை, திருமணம், காதல், பரீட்சை, வெளிநாட்டுப் பிரயாணம், இப்படிப்பட்ட நன்மைக்காரிய நடவடிக்கையில் ஈடுபட்டால், துன்பம் நிலவும். செயல்படாது அமைதியோடு இருக்க இனசனம் கூடி சந்தோஷம் மகிழ்ச்சி யேற்பட இடமளிப்பதோடு பின்பு நன்மையும் செய்யும்.

### விருட்சிகம்

(விசாகம் 4ம்பாதம், அனுஷம், கேட்டை)
கடந்த கால முயற்சித் தடை நீங்கி நல்லிணக்க உறவு தொடர்பு ஏற்பட்டு, கல்வி, தொழில், பரீட்சையில் உயர்வு, வெற்றிகரமான நட்வடிக்கை அமையும். திருமணம், காதல்தொடர்பு குழப்பம், நம்பிக்கையான மனிதர்கள் எதிரியாக மாறுவார்கள். முடிவு சந்தோஷமாக அமையும்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)
எதிர்பார்த்த வெளிநாட்டுத் தொடர்பு நல்ல முடிவாக அமையும். நல்ல மனிதரின் சந்திப்பும் அமையும். கல்வி, தொழில், பரீட்சையில் குழப்பம் ஏற்படும். வியாபாரம், விவசாயத்தில் சீர்குலைவையேற்படுத்தும். இளம் பெண்களுக்கு நிலை தடுமாறும். இறுதியில் நன்மையேற்படும்.

### மகரம்

(உத்தரம்2,3,4ம்பாதங்கள், திருகோணம், அவிட்டம் 1,2ம் பாதங்கள்)
களியாட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளல். மகிழ்ச்சியான சம்பவங்களை திடீரென சந்திக்க நேரிடும். சிறிய பிரயாணம். உறவினர் நண்பர்களின் சந்திப்பு ஏற்படும். உடல் அசௌகரியம், சோம்பல் ஏற்படும். விவசாயம், தொழில், வியாபாரம், காதல், கல்வி, தொழில் நிலைக் குலைவையேற்படுத்தும்.

### கும்பம்

(அவிட்டம் 3,4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி1,2,3ம் பாதங்கள்)
தடைப்பட்டிருந்த வெளிநாட்டுப் பிரயாணம், இடைநாட்டில் தத்தளிப்பவர்களுக்கு தெய்வனுகூலமாக வெற்றியாக அமையும். நீண்ட காலமாக அயல் நாட்டில் இருப்பவர்களுக்கு சொந்த நாட்டுக்கு வரதீவிர விருப்பம் வ்ரும். நோயாளிக்கு உடலை அசௌகரியப்படுத்தும். கூடிய பிராத்தனை செய்யவும். நன்மைக்காரியம் இறுதியில் நஷ்டத்தை உருவாக்கும்.

### மீனம்

(பூரட்டாதி 4ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி)
திருமணம், காதல், இடப்பெயர்வு நன்மையில் முடிவடையும். க்ல்வி, பரீட்சையில் பூரணமான வெற்றியேற்படாது. விவசாயம், தொழில், வியாபாரத்தில் எதிர்ப்பை எதிர்நோக்க நேரிடும். நட்புஉறவுக்குள் பகைமை தோன்றி மறையும். நீண்ட காலமாக இருந்த சிக்கல் விட்டு மறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்துருக்கொண்டானில் நடந்த மனித வேட்டை

மட்டக்களப்பு நகரிலிருந்து வடகிழக்கே 5 கிலோமீற்றருக்கு அப்பால் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி கிராம மக்கள் உள்ளன.

1990ல் நடந்த படுகொலையையடுத்து இக்கிராமங்கள் வெறிச்சோடிய நிலையிலேயே காணப்படுகின்றன.

படுகொலை செய்யப்பட்டவர்கள் போக எஞ்சிய பலர் அச்சத்தினால் இடம் பெயர்ந்து விட்டனர். வேறு இடங்களுக்கு இடம் பெயர வசதிகளற்ற ஒரு சில மக்களே இங்கும் உள்ளனர்.

அந்தப் படுகொலை நடந்து எட்டுவருடங்கள் கடந்து விட்ட போதிலும் அந்த மக்களின் முகங்களில் இன்னமும் சோகம் மறையவே இல்லை.

இங்குள்ள பலரும் சாதாரண கூலித் தொழிலாளர்களே.

1990ம் ஆண்டு யூன் மாதத்தின் பின் இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதையடுத்து சிலர் இடம் பெயர்ந்த போதும் தமக்கு ஏதும் நடக்காது என்றே பலரும் நம்பினர்.

பிள்ளையாரடி, கிராமங்களில் உள்ளவர்களை சத்துருக்கொண்டான் "போஸ்ற் ரவுண்" இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 63 குழும்பங்களைச் சேர்ந்த 170 பேர் இது வரை வீடுதிரும்பவே இல்லை.

இவர்களில் 10 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 44 ஆகும். ஒரு வயதிற்கு குறைந்த 3 கைக் குழந்தைகளும் இதில் அடங்குவர்.

சில குடும்பங்களில் யாருமே தப்பவில்லை. அவர்களின் வீடுகள் அழிந்த நிலையில் காணப்பட்டது.

இச்சம்பவத்தில் தப்பிய பலரை நாம் சந்தித்தோம்.

சத்துருக்கொண்டானைச் சேர்ந்த எஸ்.சிவக்கொழுந்துவிடம் இச்சம்பவம் பற்றி கேட்ட போது அவர் சொன்னார்.

சம்பவதினம் பிற்பகல் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன.

அன்று நானும் எனது மனைவியும் மட்டக்களப்பு நகரி

வயோதிபருமாக இராணுவ முகாம் பக்கம் சென்றோம். இராணுவ முகாம் அருகில் உள்ள காட்டுக்குள் நின்று பார்த்தோம்.

சற்று நேரத்தின் பின் மரணஓலங்கள் கேட்கத்தொடங்கின பயத்தினால் வீட்டுக்கு வந்தோம். நள்ளிரவுக்குபின் முகாம் பகுதியிலிருந்து தீச்சுவாலை எழுந்தது.

மறுநாள் காலையில் அந்த முகாமுக்குச் சென்று கொண்டு வரப்பட்ட பொதுமக்கள் பற்றிக் கேட்டோம். அப்படி யாரையும் இங்கு கொண்டு வர இல்லை என கூறிவிட்டனர் என்றார்.


மனைவி, பிள்ளைகள் அனைவரையும் இழந்து விட்ட அருள் ராசாவைச் சந்தித்தோம்.

தொழிலுக்குச் சென்று விட்டு விடு திரும்பிய போது மனைவி, பிள்ளைகள் எவரையும் காணவில்லை. வீடு திறந்திருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களையும் காணவில்லை. சுற்றி வளைப்பில் அனைவரும் கொண்டு செல்லப்பட்டதை பின்னர் அறிந்து கொண்டேன்.

நள்ளிரவு கடந்தும் அவர்கள் வீடு திரும்பாததால் காலையில் முகாமுக்கு சென்று விசாரித்த போது எவரும் இங்கு கொண்டுவரப்படவில்லை என கையை விரித்து விட்டனர்.

பின்னர் இச்சம்பவத்தில் காயங்களுடன் தப்பிய கிருஷ்ணகுமாரின் தகவலின் படி கொண்டு செல்லப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பதை அறிந்து கொண்டோம்.

மட்டக்களப்பு நகரில் உள்ள இராணுவ பிரிகேடியரிடம் சென்று முறையிட்டோம். பொது மக்கள் கொலை செய்யப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என அவர் எங்



மங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு கொண்டு வரப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

மாலை 7 மணியிருக்கும் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர் அறை ஒன்றினுள் வைத்துப் பூட்டப்பட்டனர்.

நேரம் செல்லச் செல்ல எல்லோருக்கும் பயமும் பீதியும் அதிகரித்தது.

சற்று நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. முகத்திற்கு கறுப்புத்துணி கட்டியிருந்தார்கள். பார்ப்பதற்கு பயமாக இருந்தது

உள்ளே வந்தவர்கள்

குள் ஏற்கனவே போடப்பட்டவர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

தவழ்ந்து தவழ்ந்து மடுவின் ஓரமாக வந்து படுத்துக் கொண்டேன்.இருளாக இருந்ததால் மடுவுக்குள் என்ன நடக்கிறது என்பதை வெளியில் இருந்த இராணுவத்தினர் கவனிக்கவில்லை.

ஆனால் மடுவுக்குள் இருந்து மேலே என்ன நடக்கிறது என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மடுவுக்கு வெளியே



## தப்பி வந்தவர்கள் கூறும் தகவல்கள்

1990 பிற்பகுதியில் மட்டக்களப்பு பிரதேசம் அமைதி இழந்தே இருந்தது.

பிற்பகலானதும் ஊரே உறங்கிவிடும். கூலித் தொழிலுக்கு போனவர்களும் அவசர அவரசமாக வீடு திரும்பிவிடுவர்.

1990 புரட்டாதி 9ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பின் இராணுவத்தினரின் நடமாட்டம் காணப்பட்டது."சுற்றிவளைப்பு" நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

நிலமையை புரிந்து கொண்ட ஒருசிலர் அருகில் உள்ள பற்றைக் காடுகளுக்குள் ஒளித்துக் கொண்டனர்.

இராணுவ, சிவில் உடைகளில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் சத்துருக்கொண்டான், கொக்குவில், பனிச்சையடி,

லுள்ள எனது உறவினர் வீட்டுக்கு சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இராணுவத்தினர் பொதுமக்களை கொண்டு செல்வதாக அறிந்தேன்.

நான் பற்றை ஒன்றுக்குள் மறைந்து கொண்டேன். மாலை 7 மணியளவில் வீட்டுக்கு சென்றேன். எனது மாமா, மாமி உறவினர்கள் அனைவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றதை உணர்ந்தேன்.

இரவு 8 மணியாகியும் கொண்டு செல்லப்பட்டவர்கள் வீடுதிரும்பாததால் எமக்கு அச்சம் ஏற்பட்டது. சுற்றி வளைப்பில் அகப்படாத சிலரும், கூலித் தொழிலுக்கு சென்றுவிட்டு திரும்பிய சிலருமே அக்கிராமத்தில் எஞ்சியிருந்தோம்.

நானும் இன்னொரு

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தமிழ் இன ஒழிப்பின் உச்சக் கட்டம் 1990ல் தான் நடைபெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளில் சில கிராமங்களில் உள்ள அனைவருமே அழிக்கப்பட்டார்கள்.

உலகில் எங்கும் நடக்காத கோரக் கொலைகள் இந்த மண்ணில் நிகழ்த்தப்பட்டன.

களை திருப்பி அனுப்பி விட்டார்.

சத்துருக்கொண்டான் படுகொலையை நேரில் கண்ட இளைஞரான கிருஷ்ணகுமாரை சந்தித்தோம்.

இன்னமும் அந்த கொடூர சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாதவராகவே காணப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் இச்சம்பவம் பற்றி இப்படி விவரிக்கிறார்.

1990-09-09 அன்று தொழிலுக்கு போய்விட்டு வந்து வீட்டில் தேனீர் அருந்திக் கொண்டிருந்தேன்.

மாலை 6மணியளவில் இராணுவத்தினர் வீட்டுக்கு வந்தனர். "ரவுண்டப்" எல்லோரையும் முகாமுக்கு வருமாறு உத்தர விட்டனர்.

வீட்டில் இருந்த அனைவரும் இராணுவத்தினரின் உத்தரவுப்படி முகாமுக்குச் சென்றோம்.

முகாமுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அங்கு சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி கிரா

## 1990ல் கிழக்கில நடந்த படுகொலைகளில் ஒன்று

முன்வரிசையில் இருந்த என்னையும், குமார், சின்னத்தம்பி, ஜீவரெத்தினம் ஆகியோரையும் வெளியில் கூட்டி வந்தார்கள்.

விசாரித்து விட்டு விடப் போகிறார்கள் என நினைத்தேன். வெளியில் கூட்டி வந்து சேட்டுக்களை கழற்றுமாறு கூறினார்கள். கழற்றிய சேட்டுக்களால் எங்கள் கைகளை பின்புறமாக கட்டினார்கள்.

முகாமுக்கு பின்பக்கமுள்ள காட்டுப் பகுதிக்கு எங்களை கூட்டிச் சென்றார்கள். அப்போது நன்றாக இருட்டி விட்டது.

அங்கு ஒரு பெரிய மரமுந்திரிகை மரம் அதன் அருகே சுமார் 30 அடி நீள அகலம் கொண்ட மடு ஒன்று இருந்தது. அதற்கு சற்றுத் தூரம் தள்ளி கிணறு ஒன்றும் இருந்தது.

எங்களை மடுவுக்கு அருகில் கூட்டிச் சென்றார்கள். அங்கு கறுப்புத்துணி கட்டி இராணுவத்தினர் நின்றனர்.

சிலர் துப்பாக்கி வைத்திருந்தனர். சிலர் வாள், கிறிஸ் கத்தி என்பன வைத்திருந்தனர்.

ஒருவன் இரும்பு பொல்லினால் என்னைத் தாக்கினான். நான் கிழே விழுந்தேன், மயங்கியவன் போல கிடந்தேன்.

வாள் வைத்திருந்தவன் ஒவ்வொருவராக மடு ஓரத்திற்கு இழுத்து வந்து வயிற்றுக்கு குறுக்காக வெட்டி மடுவுக்குள் தள்ளி விட்டான்.

ஒருவன் என்னை கையால் பிடித்துத் தூக்கி கிறிஸ் கத்தியால் வயிற்றில் குத்தி மடுவுக்குள் தள்ளும் போது முதுகிலும் ஒரு குத்து குத்தினான்.

வாளால் வெட்டி மடுவுக்

அவலச்சத்தங்கள் கேட்டன. வாள் வெட்டு கத்திக் குத்து காயங்களுடன் மடுவுக்குள் சிலர் வீசப்பட்டனர்.

நான் மடுவிலிருந்து வெளியே தவழ்ந்து வந்து அருகில் இருந்த பற்றைக்குள் படுத்துக் கொண்டேன்.

எங்களை கத்தியால் குத்தி மடுவுக்குள் தள்ளி விட்டு சென்றவர்கள் சிறிது நேரத்தில் நான்கு பெண்களை கூட்டி வந்தார்கள். ஒரு இளம் பெண்ணின் கையில் கைக்குழந்தை ஒன்று இருந்தது. குழந்தையைப் பறித்து இரு துண்டுகளாக வெட்டி மடுவுக்குள் வீசினான்.

நான்கு இராணுவத்தினர் நான்கு பெண்களின் ஆடைகளையும் கழற்றினார்கள். அவர்கள் கத்திய போது கழற்றிய சேலையை வாய்க்குள் திணித்தார்கள். அந்த நான்கு பெண்களும் மிகவும் கோரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள். பின்னர் அவர்களின் மார்பகங்கள் உட்பட ஒவ்வொரு அங்கமாக வாளால் வெட்டி மடுவுக்குள் போட்டார்கள். இந்த நான்கு பெண்களில் ஒரு பெண் நிறைமாத கர்ப்பிணி.

"காலக் கொடுமையால் கடவுளார் சோதனை போல் சத்துருக் கொண்டானுக்கு வந்ததே சாபக்கேடு"

மரண ஓலங்கள் கேட்ட வண்ணமே இருந்தது.

இவ்வாறு ஒவ்வொரு கட்டம் கட்டமாகக் கொண்டு வந்து வாளால் வெட்டி மடுவுக்குள் போட்டார்கள். ஒரு ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுமி கொலைகாரர்களின் காலில் விழுந்து கெஞ்சிக் கதறினாள். அவளைத் தூக்கி வயிற்றில் கிறிஸ் கத்தியால் குத்தி மடுவில் போட்டான் ஒருவன்.

கடைசியாக மூன்று பெண்கள் கொண்டு வரப்பட்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயில் எழும்ப வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் அளப்பரிய சேவைகளை ஆற்றுவோரை வாழும்போதே கௌரவிக்கும் நோக்குடன் நிறுவப்பட்ட 'ஆரத்தி' அமைப்பு ஒரேயொரு தடவையுடன் கௌரவிப்பு நிகழ்ச்சியை நிறுத்தியுள்ளது கவலைக்குரியதாகும்.

கடந்த 2 வருடங்களாக 'ஆரத்தி' நிறுவனம் எவரையுமே கௌரவிக்கவில்லை. இந்த அமைப்பின் நோக்கத்திற்கு தலை வணங்குகிறோம். ஆனால் மௌனமாக இருப்பது பலரை விசனத்திற்குள்ளாக்கியிருக்கிறது.

மிகவும் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த நிறுவனம் பிறந்துள்ள புதிய வருடத்திலாவது துயில் நீங்க வேண்டுமென்பது பலரது அவா.

என் சிந்துஜா

## எவ். எம். சேவை தெளிவில்லை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பண்பலை (எவ். எம்) சேவை மட்டக்களப்பு மாவட்டத்தில் தெளிவாக இல்லாததால் நேயர்கள் அவதியுறுகிறார்கள்.

குறிப்பாக தமிழ் நிகழ்ச்சிகளே தெளிவில்லாமல் உள்ளது. இதனால் சிலவேளைகளில் செய்தி அறிக்கைகளைக் கூட கேட்கமுடிவதில்லை.

ஏனைய சேவைகள் தெளிவாக கேட்கும்போது தமிழ் சேவைகளுக்கு இந்தக் கதி நிகழ்ந்து வருவது கூட இனவாதத்தின் வெளிப்பாடோ என நேயர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

தொடர்பு சாதனைத் துறை வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வானொலி நிகழ்ச்சிகளைக் கூடத் தெளிவாகக் கேட்க ஆவன செய்யப்பட் வேண்டும்.

வி.கந்தையா
கல்லடி.

## பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக கணிக்கப்படவில்லை.

(நிந்தவூர் நிருபர்)

கல்முனைக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களில் 1994ஆம் ஆண்டு தொலைக் கல்வி மூலம் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியருக்கான சம்பளம் மாற்றியமைக்கப்படவிலலை.

இவ்வாசிரியர்கள் 1990 ஆம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, 1994ஆம் ஆண்டில் நிரந்தர உதவி ஆசிரியர்களாகவும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர்களாகவும் ஆக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாசிரியர்கள் 1995.01.01 இல் இலங்கை அரசு அறிமுகம் செய்த "ஆசிரியர் சேவை" வகுப்பு03; தரம் 02ற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், தற்போது இவர்கள் ஆசிரியர் சேவை வகுப்பு 03, தரம் 01ற்கு மாற்றப்பட வேண்டும் என்றும், இவ்வாறு மாற்றப்படாததால் தாம் பதவி உயர்வுகள், பயிற்சி வகுப்புக்கள், இடர்காலக் கொடுப்பனவுகள், கடன்கள் போன்ற பல்வேறு விடயங்களில் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக மேற்படி ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

# நெற்றிக்கண்

## உடனடி நடவடிக்கை அவசியம்

சாய்ந்த மருது -மாளிகைக்காடு எல்லையிலுள்ள வாவிக் கரை வேகமாக மூடப்பட்டு வருகிறது. இதன் சாய்ந்த மருதுக்கரையின் மிகவும் கூடுதலான பரப்பு மூடப்பட்டு விட்டது. இப்போது மாளிகைக்காடு கரை மூடப்பட்டு வருகிறது.

முன்பு 20 மீற்றருக்கும் அகலமாக இருந்த தோணா இப்போது 3 மீற்றருக்கும் குறைவாகவே உள்ளது.

இதன் இரண்டு கரையிலும் உள்ள தனவந்தர்கள் தங்களிடம் உள்ள உழவு இயந்திரங்களின் உதவியோடு இந்த வேலையில் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது போலவே மாளிகைக்காடு காரைதீவு எல்லை வீதியின் காரைதீவுக்கரையும் மிகவேகமாக மூடப்பட்டு வருகிறது.

மாளிகைக்காடு வாழ்மக்களுக்குரிய ப.நோ.கூ.சங்கக் கிளை, வாசிகசாலை என்பன தனியார் கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றது. இவ்வாறு மூடப்படும் சட்ட விரோத நிலத்தை அரச அனுமதியுடன் பெற்று, இப்பகுதி மக்களுக்குரிய ப.நோ.கூ.சங்கம், வாசிகசாலை என்பனவற்றை அமைப்பதோடு, சட்டவிரோதமான இந்த நடவடிக்கைக்கு முற்றுப் புள்ளி வைக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எம்.எம்.முஸ்தபா
சாய்ந்தமருது.

## பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்

மட்டக்களப்பு மாநகர சபை வாகனப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் குப்பை அள்ளும் நடவடிக்கைகளை ஓரளவு துரிதமாக மேற்கொண்டு வருகிறது. எனினும் மட்டக்களப்பு நகர வீதியில் பாடசாலைகளை ஆரம்பித்த பின்னர் இதனை மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

மாவட்டத்தின் சகல பிரதான பாடசாலைகளும் புளியந்தீவு பகுதியில் அமைந்துள்ளன. இதனால் காலைவேளையில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துக் காணப்படுவது தவிர்க்க முடியாது.

இந்த நிலையில் நகரின் குறுகலான வீதிகளில் வாகனங்களை நிறுத்தி குப்பைகளை அள்ளுவதால் பாதசாரிகளும், வாகனங்களில் செல்வோரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்படுகிறது.

## நிதி ஒதுக்கிய எம்பியும் இறந்துவிட்டார். தார்வீதியும் போடப்படவில்லை.

சென்ற ஆண்டு மாசி மாதம் (1997-02-25) அன்றைய திருமலை பா.உ. திரு.அ.தங்கத்துரை அவர்களால் எமது திருக்கடலூர் கிராமத்தின் நான்கு வீதிகளுக்கும் தார்போடப்பட்ட பாதை அமைக்க பன்முகப் படுத்தப்பட்ட நிதி மூலம் பணம் ஒதுக்கப்பட்டது. அது பல மன்றாட்டங்கள் மூலம் பெறப் பட்டது. ஆனால் மூன்று மாதங்களின் பின் இழுபறி நிலையில் ஒரேயொரு பாதை மட்டும் முற்றாக தார் பூசப்பட்டது. ஆனால் பாதைக்கு கிரவல் போட்டு விட்டு சென்றவர்களை காணவில்லை பா.உறுப்பினர்களிடம் (தங்கத்துரை) கேட்டதற்கு அது வீதிப்புனரமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது என்றார். அமைச்சு அலுவலகத்திடம் கேட்டதற்கு கல்வரவில்லை! மண் வரவில்லை என்றே காலம் போக்கினர். இடையில் பா.உறுப்பினரும் அகால மரணமானார். இப்போது புதுவருடமும் பிறந்துவிட்டது. பாதைகள் அப்படியே இருக்கிறது! தார் போடப்படவில்லை. சம்பந்தப்பட்ட தெருக்கள் -பெருந் தெருக்கள் புனரமைப்பு அமைச்சு கவனிக்குமா?

-கலாதரன்-

நெற்றிக்கண் பகுதிக்கு வாசகர்களிடம் இருந்து கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். நீங்கள் வாழும் பிரதேசத்தில் நிலவும் பொதுவான பிரச்சனைகளை நீங்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி
நெற்றிக்கண்
தினக்கதிர்
ப.பெ.இல-06
மட்டக்களப்பு

## தேய்ந்து போகும் மட்டக்களப்பு டிப்போ

மட்டக்களப்பு மாவட்டத்தில் நியூ ஈஸ்ரேண் பஸ் கம்பனி போக்குவரத்து சேவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சீர்குலைந்து வருகின்ற போதிலும் உப - டிப்போக்களும் ஏட்டிக்குப் போட்டியாக திறக்கப்பட்டு வருகிறது.

அரசியல்வாதிகள் தமது கௌரவப் பிரச்சனையாக இதனை மாற்றி டிப்போக்களை திறக்கிறார்களே தவிர போதிய பஸ்வண்டிகளைப் பெற்று போக்குவரத்து சேவையை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவதில்லையென்றே குறை கூறப்படுகிறது.

மட்டக்களப்பு டிப்போ மிகுந்த நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்ற போதிலும் இந்த அரசு பதவியேற்ற பின் அதன் கீழ் களுவாஞ்சிக்குடி உப-டிப்போ திறக்கப்பட்டது. இப்போது ஏறாவூர் நகரிலும் திறக்கப்படவுள்ளது. அதேபோல வாழைச்சேனை டிப்போவுக்கு கீழ் காத்தான்குடியிலும் உப-டிப்போ திறக்கப்படவுள்ளது.

இது நஷ்டத்தை மேலும் அதிகரிக்குமே தவிர யதார்த்த ரீதியாக எந்த நன்மையையும் தராது.

நிர்வாக செலவினங்கள் அதிகரித்துள்ளதால் மேலும் நஷ்டம் கூடியது தவிர டிப்போக்கள் திறக்கப்பட்டதால் எந்த நன்மையுமில்லையென தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்து துறை அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகி விட்டது. அரசியல் கட்சி அலுவலகங்களைப் போல ஆங்காங்கே டிப்போக்களைத் திறப்பதில் ஆர்வம் காட்டுவதை விட கொழுத்தும் வெயிலில் மணிக்கணக்கில் வீதிகளில் பேருந்து வண்டிகளுக்காகக் காத்திருக்கும் பிரயாணிகளின் ஆதங்கத்தை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சகல மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் போக்குவரத்து சீர்கேடுகளையை ஒருமித்து நடவடிக்கை எடுத்து ஆர்வம் காட்டவேண்டும்.

புகையிரத, விமான சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்ட நிலையில் பொது மக்கள் பகல் சேவையையே பெரிதும் நம்பியுள்ளார்கள். ஆனால் மக்கள் தொகைக்கேற்ப பஸ்வண்டிகள் இல்லாததால் மக்கள் சொல்சொணா துயரங்களை அனுபவித்த வருகிறார்கள்.

*என்.சிந்துஜா*

**பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை.**

எமது பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றக் கூடிய பயிற்சிப்பத்திரிகையாளர் தேவை.

எழுத்துத்துறையில் ஆர்வமும் க.பொ.த.உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

பிரதம ஆசிரியர்
தினக்கதிர்
த.பெ.இல. 06
மட்டக்களப்பு.



## இது ஓர் அனாதைப் பாடசாலை! கண்திறந்து பார்ப்போர் இல்லையா?

- அம்பாறை மாவட்ட நிருபர் -

நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் வறிய மக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள -அல் - அதான் வித்தியாலயத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்!

இங்கு தென்படும் கட்டிடம் இப்பாடசாலைக்கு உரிய கட்டிடமல்ல, 01.02.1996ல் இந்து ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது மீனவர் தங்குமடமாக இருந்த மேற்படி கட்டிடம் பிரதேச செயலாளரால் தற்காலிகமாக வழங்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை இப்பாடசாலை குறித்த தற்காலிக கட்டிடத்திலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் இயங்க வேண்டிய அவலம் நீடித்து வருகின்றது.

இப்பாடசாலைக்கென சொந்தமாக ஒரு கட்டிடமேனும் இதுவரை அமைக்கப்படவில்லை.

ஐ.எஸ்.டி.திட்டத்தின் கீழ் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென 1996 - 1997ம் ஆண்டுகளில் சிபார்சு செய்யப்பட்டும் காரியம் எதுவும் நடக்கவில்லை!

கல்வி அமைச்சும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இனியாவது இப்பாடசாலையைத் தன் கவனத்திற் கொண்டு வளர்த்தெடுக்க முன் வருமா? என இப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அரசியல்வாதிகளின் கண்களும் இதுவிடயத்தில் திறக்கமாட்டாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பளிங்கு மாளிகை தலந்தோறும் இடம்தோறும் பசுந்தேன்.
குளிக்குங் கற்பக தன்னறுஞ் சோலைகள் தோறும்
அளிக்கும் தேறலுண்டு ஆடுனர் பாடுனராகி
களிக்கின்றார் அல்லல் கவல் கின்றார் ஒருவரையும் காணேன்."

இப்பாடல் அன்று ஈழத்தில் இசை மன்னன் இராவணன் ஆட்சியில் கவலையில்லாது ஆடிப்பாடி மகிழ்ந்த சுந்தர வாழ்க்கையைப் பற்றி அனுமன் கூறியது.

சுதந்திரம் என்றால் கவலைகள் இன்றி ஆடிப்பாடி ஆனந்தமாக வாழும் வாழ்க்கையே சுதந்திர வாழ்க்கை. அத்தகைய சிறந்த உகந்த வாழ்க்கையை மக்களுக்கு அளித்த மாவீரன் மன்னன் இராவணன் மட்டுமேயாகும்.

இராவணன் ஆட்சிக் காலத்தில் கூடங்கள் மாடங்கள் கட்டினோம். கலை கலாச்சாரத்தை வளர்த்தோம். நாடும் ஏடும் போற்றும் நல்வாழ்க்கை வாழ்ந்தோம். இது சொந்த ஆட்சியில் தமிழன் கண்ட அனுபவித்த சுதந்திர சுக வாழ்க்கை. "நாம் யாருக்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்" என்றும் யாதும் ஊரிலே யாவரும் கேளீர் என்ற நிலமையையும் நினைப் பையும் ஏற்படுத்தியசூழல் சந்தர்ப் பமே சுதந்திர நிலை. இன்றைய நிலை என்ன?

அன்னியர் காலெடுத்து வைக்கும் முன் வடபகுதியில் தமிழர் தனி அரசு வன்னியில் பன்னாகமத்தில் வன்னியர் சிற்றரசு. கதிர் வரை நடைபெற்றது. போர்த்துக்கீசரிடம் தாரை வார்த்து தலைமுழுகிய சிங்களவர் பிரிட்டிஸாரிடம் கண்டி மன்னனைக் காட்டிக் கொடுத்து கைலாகு வாங்கினார்கள். இலங்கைக்குத் துரோகம் இழைத்தவர்கள், இலங்கை மாதாவின் துயில் உரிந்து அன்னியருக்கு அடவு வைத்தவர்கள். சிங்களவர் என்பதை நாடறியும். நாமறிவோம். ஏடறியும்.

அன்னியர் ஆட்சியில் தமிழரும், சிங்களவரும் சமஉரிமையோடு தலை நிமிர்ந்து வாழ்ந்தோம். சமத்துவம் சகோதரத்துவம், நிலைத்து நீடித்தது.

அன்னியர் ஆட்சியை அகற்ற, அடிமை விலங்கறுக்க, அனைவரும் அணிதிரண்டோம். அதிலும் தமிழர்கள் தலைமை தாங்கி வழிநடத்தியது முண்டு. எனவே நாம் யாரோ மூட்டிய தீயில் குளிர்காய வந்தவர்களல்ல. ஆனால் சிங்களவர் பெரும்பான்மையான படியாலும் ஏற்கனவே கண்டி மன்னனை காட்டிக் கொடுத்து ஆங்கிலேயருக்கு ஆதரவு நல்கிய தாலும் பிரிட்டிஸார் ஆட்சியை அவர் கையில் ஒப்படைத்தார்கள்.

1948ம் ஆண்டு மாசி மாதம் 4ந் திகதி அன்னியர் ஆட்சி அகன்றது. அடிமை விலங் கொடிந்தது. ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என ஆடிப்பாடி மகிழ்ந்தோம். ஆனால் இந்த மகிழ்ச்சி நிலைத்ததா? நீடித்ததா? சிங்களவர்கள் ஆட்சியை கையேற்றதும், அடுக்கடுக்காக நிதித்துவம், சுதந்திர ஆட்சியில் வன்னியிலும், திருமலையிலும், அம்பாறையிலும் ஏற்படுத்தப் பட்டுவிட்டதே இது தானா சுதந்திரம்.

நாட்டையே அன்னியருக்கு காட்டிக் கொடுத்தவர்கள் சிங்களவர்.

நாம் அப்படியல்ல. மண்ணுக்காக மரணத்தை மகிழ்ச்சியுடன் அணைத்தவர்கள். ஏற்றிவைத்த வடுக்கள் இவை.

1958, 1983, 1989ம் ஆண்டுகளை நினைத்துப்பார். கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தமிழர் வெட்டிக் கொலை

# பொன்விழா யாருக்கு?

அன்னியர் ஆட்சியில் தமிழும் சிங்களமும் இந்த நாட்டில் சமமான தேசிய மொழிகள். 1956ம் ஆண்டு வரை சட்டசபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஆட்சி மொழிகள் இவை.

சுதந்திரத்தின் பின் என்ன நடந்தது. 1956ம் ஆண்டு தனிச் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் தாக்கப்பட்டார்கள். உதைக்கப்பட்டார்கள். தமிழருக்காகப் பேசிய இலங்கை சமசமாஜக்கட்சியினரும் பொதுவுடைமைக்கட்சியினரும் பாராளுமன்றத்திலிருந்து வெளிவரமுடியாத நிலை பொலிஸாரின் பாதுகாப்பிலே வெளிவரவேண்டிய பயங்கரச்சூழல். இதுவா சுதந்திரம்? சுதந்திரமல்ல தமிழருக்கு அந்தரமாகும்.

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கிறோம் என்று கூறி மதஸ்தாபனங்களால் நடத்திய பாடசாலைகளை எல்லாம் அரசு கையேற்றது பலனென்ன? அழித்தொழித்ததுதான் சுதந்திரமா?

உயர்கல்வியில் தமிழருக்கு தரப்படுத்துதல் மூலம் சதிசெய்யப்பட்டது. தமிழ் இளைஞர் நாட்டில் மட்டுமல்ல. வாங்கிய சுதந்திரத்திலும் பங்கும் பகையுமுடைய வர்கள். மண்ணின் மைந்தர்கள்.

செய்யப்பட்டதையும் உடுத்த உடையோடு தமிழர் கப்பலேற்றப்பட்ட கொடுமைகளின் கடுமையைச் சிந்தித்துப்பார். இது

**போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது எதிர்த்து வாளெடுத்துப் போராடியவன் தமிழன். அவர்தாள் பணியமறுத்து - தண்டம்தூக்கி - தலைநிமிர்ந்து போராடியவன் தமிழன் - ஆனால் சிங்களவர் நிலை அப்படியல்ல- போர்த்துக்கேயர் போர் தொடுக்கு முன்பே வாள் எடுப்பதற்கு முன் அவன் தாள் பணிந்து- தலைகுனிந்து - கோட்டையையும் சீதவாழ்க்கை ஆட்சியையும் தாரைவார்த்துக் கொடுத்தவர்கள். மன்னன் தர்மபாலா மதம் மாறி- டொன் சுவான் தர்மபாலாவானான்**

அன்னியர் ஆட்சியில் மொழியுரிமை பெற்றிருந்தோம். தாயகத்தைப் பாதுகாத்தோம். திறமைக்கு முதலிடம் பெற்றோம். சுதந்திரத்தின் பின் பிரசாவுரிமை இழந்தோம். தாயகத்தின் பல பகுதிகளை இழந்தோம்.

வட- கிழக்கில் சிங்கள பிரதிநிதிகள் உருவாகி விட்டது. விழியிலும் மேலான மொழியைப் பறிகொடுத்தோம். அனுராதபுரத்தில் சுதந்திரம் நமக்களித்த, அளிக்கின்ற பரிசு.

அந்தோ! தமிழா! இன்று தமிழ்பிரதேசங்களின் நிலை என்ன? சிந்தித்துப்பார். தமிழ் பிரதேசம் அனைத்தும் யுத்தப்பிரதேசமாக்கப்பட்டுள்ளது. தமிழர் அனைவரும் அகதிகளாக அகிலமெங்கும் அலைகிறார்கள். சொந்த மண்ணில் அகதிமுகாமில் தமிழன் அடிமையாக்கப்பட்டுள்ளான். சிறைச்

# இலங்கையை காட்டிக் கொடுத்தவர்கள் சிங்களவர்களே

காமம் சங்கமா கண்டியில் தமிழ் சிற்றரசுகள். கோட்டை சிங்கள ஆட்சியானாலும் தமிழ் ஆட்சி மொழி கண்டியில் தமிழ் அரசு பரம்பரை.

போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது எதிர்த்து வாளெடுத்துப் போராடியவன் தமிழன். அவன் தாழ் பணிய மறுத்தது - தண்டம் தூக்கி- தலைநிமிர்ந்து போராடியவன் தமிழன். ஆனால் சிங்களவர் நிலை அப்படியல்ல. போர்த்துக்கேயன் போர்தொடுக்கும் முன்பே வாள் எடுப்பதற்கு முன் அவன் தாழ்பணிந்து -தலை குனிந்து கோட்டையையும் சீத வாழ்க்கை ஆட்சியையும் தாரை வார்த்துக் கொடுத்தவர்கள். மன்னன் தர்மபாலா மதம் மாறி டொன் சுவான் தர்மபாலாவானான்.

சீ-இவ்வளவு கேவலமாக கோழைத்தனமாக -சொந்த ஆட்சியையும் மன்னனையும் மரணத்திற்குப் பயந்து மண்டி இட்டுக் கொடுத்த சிங்களவர் "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் சிறந்தவை உயர்ந்தவை என்பதற்காக உயிரை தந்த தமிழனை அடிமைகொள்ள முடியுமா? கொள்ளலாமா? தமிழன் சம்மதிப்பானா? இக்கேள்விக்கு விடைதான் நாடு. கண்கொண்டுள்ள நலிவுகள், பூகம்பம், புகைச்சல், எரிச்சல் எல்லாம்.

இலங்கையில் சிங்களவர் ஆட்சி போர்த்துக்கீசர் வருகையோடே மடிந்து விட்டது. மறைந்து விட்டது. ஆனால் வன்னி பன்னாகமத்தில் நடைபெற்ற கயிலை வன்னியனில் சிற்றரசு டச்சுக்காரர் காலம் வரையும் நிமிர்ந்து நின்றது. கண்டியில் கண்ணுச்சாமி என்ற இயற்பெயரைக் கொண்ட விக்கிரம சிங்கனின் ஆட்சி சிங்கள அமைச்சர்களான எகிரில் பொல, பிலிமெத்தலாவை போன்ற இனத்துரோகிகளால் பிரிட்டிஸாருக்கு காட்டிக் கொடுக்கும் தமிழருக்குத் துரோகங்கள் இழைத்தார்கள். இழைத்துக் கொண்டே வருகிறார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் மாசி மாதம்4ந் திகதியுடன் நிறைவு பெறுகின்றன. ஆட்சியை தமதாக்கிக் கொண்ட சிங்களவர்கள் சுதந்திரப்பொன்விழா காணத் துடிக்கிறார்கள். ஆனால் தமிழா உன் நிலை என்ன? ஓட்டிறுண்பதையும் கன்னாரப்பயல் கெடுத்த கதையல்லவா உன் கதை. இந்த ஐம்பது ஆண்டுகளில் நீ அடைந்த, அடைகின்ற துன்பங்களையும் துயர்களையும் எண்ணிப் பார்?

சுதந்திர இலங்கையில் அன்னியர் ஆட்சி மலை நாட்டுத் தமிழருக்கு வழங்கி இருந்த பிறப்புரிமையான பிரசாவுரிமையை பறித்தார்களே இது சுதந்திரமா? மலைநாட்டுத் தமிழர் இந்த நாட்டு வளத்துக்கு வாழ்வுக்கு உயிர் தந்தவர்கள். மாடாக உழைத்து ஓடாக தேய்ந்தவர்கள். 150 வருடங்களுக்கு மேலாக வருமானத்தை வளர்த்து நாட்டின் வளத்தைப் பெருக்கிய உழைப்பாளிகளின் உரிமையைப் பறித்தது சுதந்திரமா?

**பூ.மா.செல்லத்துரை**

அன்னியர் ஆட்சியில் பாதுகாக்கப்பட்ட தமிழர் பிரதேசமான வட-கிழக்கில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தி தமிழர் பூமியைப் பறித்தது சுதந்திரமா? காடுகளை அழித்து தமிழ் பகுதிகளை வரண்ட பாலைவனமாக்கி துரோகமிழைத்தது சுதந்திரமா? அன்னியர் ஆட்சியில் இல்லாத தமிழ்ப் பகுதிகளில் சிங்களப் பிரதி



யுவதிகளின் உயர்கல்வி, தட்டிப் பறிக்கப்பட்டது. இது அன்னியர் ஆட்சியில் இல்லாத ஒன்று. வேலை வாய்ப்பில் திறமை புறக் கணிக்கப்பட்டு தமிழர் ஒதுக்கப் பட்டார்கள். சுதந்திரம் தமிழருக் கிழைத்த அந்திரங்கள் அவதிகள் இவை.

சிங்கள அமைச்சர்கள் கண்டித்தமிழரசனை ஆங்கிலேயருக்கு காட்டிக் கொடுத்தார்கள். ஆட்சி அதிகாரப்பசியால் தாய்த்திரு வாழ்ந்த பத்தாயிரம் தமிழ் குடும்பத்தை இழந்தோம். பொலனறுவையில் தமிழர் வாழ்ந்த சுவடே தெரியாது அழிக்கப்பட்டு விட்டது. நாட்டில் நடமாட முடியாது. வீட்டில் அமைதியாக இருக்க முடியவில்லை. இதுவா நாம் பெற்ற சுதந்திரம்.

பெளத்தம் இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ள நாகரிக விழுமியங்கள் இவை. வரலாற்றில் வங்கத்து வம்பர்கள்

சாலையில் சித்திரவதை. வீதியல் நடமாடமுடியாத நிலை. விமானக் குண்டுகள் ஒருபுறம். செல்லடி மறுபுறம். தமிழர் நாளும் பொழுதும் அழிந்துகொண்டிருக்கிறார்கள். கையிழந்தோர். காலிழந்தோர் தொகை, தொகை. கட்டிய கணவனை இழந்த விதவையர் மகனை இழந்த தாய் தந்தையர், உற்றாரை இழந்தோர், உறவை மறந்தோர் ஏராளம் எராளம். அகதிகளாக உணவின்றி, உறைவிடமின்றி, மருந்தின்றி மடிகின்றார் தமிழர். இதுதானா சுதந்திரம். இதற்கோர் கொண்டாட்டமா?

இத்தனை அவலங்களையும் பெற்றுத்தந்த பொன்விழா உனக்கு புண்விழா. இதைக் கொண்டாட உனக்கு ரோசமில்லையா? சூடில்லையா? சொரணையில்லையா?

செங்கலடியில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
சிவா ரேடர்ஸ்
பிரதானவீதி
செங்கலடி
தொலைபேசி -40541
&
விப்ரா ஸ்ரோர்ஸ்
பிரதானவீதி
செங்கலடி

திருகோணமலையில் எமது
தினக்கதிர் விற்பனை
முகவர்
டில்கா கிறீம் ஹவுஸ்
66, 68, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
026 - 22709.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்புப் பெருநாள் கவிதை

## ரமழானே நீ வர வேண்டும்?

கறைகள் நிறைந்து காரிருள் சூழ்ந்து
கலகங்கள் மூண்டு: காளைகள் சீரழிந்து
குறைகள் குவிந்து: குணங்கள் மடிந்து
குவலயம் கொலை யுண்ட வேளை
மறையை மனித இதயங்களில் விதைத்து
மாந்தர்க்கு மாண் பளித்திட
நிறைவோடு இத்தரை மீதே வந்த
நிலவொளியே புனித ரமழானே!

பாவிகள் மனங்களிடையே புகுந்து
பால்வார்த்தே பணிபுரிந்தாய்
காவிச்சென்று கோள் மூட்டும்
கன்னியர்க்கும் கடிவளைய மிட்டாய்
நாவிற்கும் நல் வழி காட்டியே
நாயன் புகழ் பாட வைத்தாய்
சாவின் அழிவுப் பாதையில் சென்றோரை
சாந்தி மார்க்கத்தில் சங்கமிக்கச் செய்தாய்!

உன் சேவைக்கு ஒரு மாதம் போதாது
உளம் திறந்தேதான் சொல்கின்றேன்
பன்னி ரெண்டு மாதங்களிலும் நீ:
பாங்காய் பணி செய்ய வரவேண்டும்
நன்மைகள் மலை போல் குவிய.
நாயன் கணக்கில் சளைக்க வேண்டும்
உண்மைகள் உயிர் பெற் றெழுந்து
உலகம் முழுவதும் ஒளிபரப்ப வேண்டும்.

பிரியாவிடை பெற்றுச் செல்கின்ற
பிரியமான புனித ரமழானே

பரிவோடு விடை தருகின்றோம்
பறந்தே நீ வர வேண்டுகின்றோம்
வரி செலுத்தினாலும் கிடைக்காத பொக்கிஷமே
வாஞ்சையோடு உனை அழைக்கின்றோம்
சுரி' என்று தலை அசைக்காது
சாமர்த்தியமாய் மீண்டும் நீ வர வேண்டும்!

- நிந்தவூர் றபீக் பிர்தௌஸ் -.


ஈதுல் பித்ர் பெருநாள்
வாழ்த்துக்கள்!

பாஸ்போர்ட், அடையாள அட்டை படப்பிடிப்பிற்கும், உங்கள் இல்லங்களில் நிகழும் திருமணம் மற்றும் விஷேட நிகழ்வுகளின் படப்பிடிப்பிற்கும் எம்மை நாடுங்கள்.

**எஸ்.எம்.ஸ்டூடியோ,**

பிரதான வீதி
நிந்தவூர்

ஈதுல்பித்ர் நல்வாழ்த்துக்கள்!

சகல வித ஆங்கில மருந்துவ வகைகளுக்கும், மற்றும் நானாவித பொருட்களுக்கும் நாடுங்கள்

**ஜுனைட் பாமஸி & குறோசறி**


பிரதான வீதி
நிந்தவூர்

ஈதுல்பித்ர் நல்வாழ்த்துக்கள்

மட்டுமா நகரில் சகல வகையான ஆடைத்தெரிவுகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஜவுளி சமுத்திரம்.

**பூளூலகூன்**

117, திருமலை வீதி
மட்டக்களப்பு
T.P - 23280

**ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்**


ஈதுல்பித்ர் பெருநாள்
நல்வாழ்த்துக்கள்

வீரகேசரி, தினக்குரல், நவமணி, தினக்கதிர் உட்பட பல்வேறு வார, மாத இதழ்களும் எம்மிடம் கிடைக்கும்

**சுல்பா ரேடர்ஸ்**

பிரதான வீதி - நிந்தவூர்

ஈதுல் பித்ர் பெருநாள்
வாழ்த்துக்கள்

திருமண விசேட வைபவங்கள் உட்பட அவசர பாஸ்போர்ட், அடையாள அட்டை படப்பிடிப்பிற்கு சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ருடியோ ஷர்மிளா**
அம்பாறை வீதி
அக்கரைப்பற்று.

ஈதுல்பித்ர் பெருநாள் வாழ்த்துக்கள்

தினக்குரல், தினகரன், வீரகேசரி உட்பட சகல தமிழ் ஆங்கில தினசரிகள், வாரமாத இதழ்கள், சஞ்சிகைகளுக்கு நாடுங்கள்.

**ஹனிபா ஹோட்டல்**

பிரதான வீதி
கல்முனைக்குடி.

ஈதுல்பித்ர் பெருநாள் வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள்
சகலருக்கும் ஈகைத்திருநாளாம்
'ஈதுல்பித்ர்' பெருநாள் நல்வாழ்த்துக்கள்.

**ஏ.எல்.எம்.சலீம்**
சமாதானநீதவான்

தலைவர்
கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்,
நிந்தவூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அலைகள்

## திறமைசாலி

(குறுங்கதை)

எப்போதும் பொடி நடையாகக் கடைக்குச் சென்று சோமசுந்தர வாத்தியார் காலையிலே பத்திரிகையுடன் வந்து யன்னலோரம் கிடக்கும் ஈசிச் செயாரில் அமர்ந்தா ரென்றால் அன்றைய நாட்டு நடப்புக்களை வாசித்து முடிப்பதற்குள் தனது மகள் துவாரகியின் செயல்களையும் கவனித்து நச்சரித்துக் கொண்டிருப்பார்.

துவாரகி படித்து முடித்துவிட்டு ஒரு வேலை கிடைக்கும் வரை ஊருக்கு உழைக்க வேண்டும் என்ற பேரவாக் கொண்டவள். கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி, மாதர் சங்கத் தலைவி என பல தலைவர் பதவிகளையும் கொண்டிருந்தாள்.

துவாரகி எல்லா மக்களிடமும் அன்புசெலுத்துவாள். கண்களில் கருணை நிறைந்தவள். சிறுவர் முதல் பெரியவர் வரை மிகவும் அதிகமாக அன்பு காட்டுவாள். அவள் யாரையும் மனம் நோக நடக்கமாட்டாள். அதே நேரம் பிறரைப்பற்றி யாரும் கதைக்கவும் கேட்க மாட்டாள். சமூகத்திற்கு எப்போதும் நல்லதையே செய்ய வேண்டும் என்ற முனைப்பும் துடிப்பும் கொண்ட துவாரகி அந்த ஊர் மக்களின் மனதில் இடம் பிடித்து கொண்டாள்.

அன்று வழமை போல் பத்திரிகையில் மூழ்கிக் கொண்டிருந்த சோமசுந்தரத்தார், "காமாட்சி.... என்ன உண்ட ஏக புத்திரி கெதியாகக் கெதியாக வெளிக்கிடுறாவு எங்க போகவாம்" என்று கரகரப்பான குரலுடன் இழுத்தார். எப்போதும் துவாரகியின் தந்தைக்கு நச்சரிப்பது வழக்கமாகி விட்டது.

இவரைத் திருத்தவே முடியாது என்று மனதுக்குள் நினைத்த துவாரகி காதில் வாங்கிக் கொள்ளாத மாதிரி அவசரஅவசரமாக உடுத்திக்கிட்டாள்.

மீண்டும் நான் கேக்கிறன் அல்லவா... என்று சொல்லி முடிக்க முதல்" என்னப்பா... நீங்க நானும் தான் பார்க்கிறன் எப்ப பார்த்தாலும் புள்ளைய நச்சரித்துக் கொண்டு தான் இருக்கிறீங்க.... என்றாள். துவாரகி செய்கின்ற ஒவ்வொரு செயலும் காமாட்சிக்குப் பிடிக்கும். காமாட்சியுடன் தனது ஒவ்வொரு செயற்பாடுகளையும் துவாரகி சொல்லும் போது பெருமிதம் அடைவாள் தாய். எப்போதும் தனது மகளுக்குப் பக்க பலமாக இருப்பாள் காமாட்சி.

இருந்தாலும் மகளுக்கு நல்ல ஒரு வரன் அமைய வேண்டும் என்று ஏக்கப் பெருமூச்செறிவாள்.

காமாட்சி "என்ன யோசிக்கிறா நான் உண்ட புள்ளைக்கு சொல்ல ஏலாது இண்டைக்கு எத்தின மாம்பழம்போல மாப்பிள்ளை பார்த்தநான். அவள் எனக்கு இவனப்பிடித்திருக்கு என்று சொல்லுகிறாள் இல்லையே. வயதும் இருபத்தைந்தை தாண்டித்து. இன்னும் இன்னும் இப்படியே திரியப்போறாவாமா...? பொம்புளப்புள்ள என்ன அடக்க ஒடுக்கமாக இருந்தாத் தானே நல்லாப்படிச்சவன் பண்புள்ளவன் வருவான்... என்று முடிப்பதற்குள் சும்மா இருங்கப்பா எந்த நாளும் தானே அந்தப் புள்ளையை நச்சரித்துக் கொண்டிருக்கிறீங்க. துவாரகி கண்ணியமான புள்ள இண்டைக்கு எத்தனையோபேர் உண்ட புள்ள மாதிரித்தான் நாங்களும் புள்ளைய வளக்கோணும் எண்டு சொல்லுறாங்க. எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா.... என்று காமாட்சி சொல்லவும் கவலை பரந்த முகத்துடன் சோமசுந் தரத்தார் வாசலையே பார்த்துக் கொண்டிருக்க துவாரகியின் எதிர்கால கணவன், அவளுடைய சேவையை நேசிப்பவன், அவளுக்கு எல்லாவித்திலும் உறுதுணையாக நிற்பவனின் "பிக்கப்" வாசலில் வந்து நின்றது.

- அ.குணா -

## காத்திருப்பதாலல்ல.........

ஏமாற்றங்களே
வாழ்க்கையாகும் போது
உறவுகள் கூட
கசப்பாக இருக்கின்றன.

தோல்விகளே
தொடர்கதையாகும் போது
சொந்தங்கள் கூட
விலகித்தான் செல்கின்றன.
ஆனால்,
வசந்தங்களே
வாழ்க்கையாகும் போது
வஞ்சியே
உன்னைத்தேடி
எத்தனை உறவுகள்
எண்ணிப்பார்
இல்லாத சொந்தங்கள் கூட
வந்துதான் சேர்கின்றன.

இது மனித இயல்பு
மானிட ஜென்மத்தின்
மாறாத நியதி
என்பதைப் புரிந்து கொள்
பெண்னே

ஏமாற்றங்களே வாழ்க்கையல்ல
வாழ்க்கையில் தான் ஏமாற்றங்கள்

இரவும் பகலும் வருவது
போலவே
வெற்றியும் தோல்வியும்
சகஜம்
என்பதை உணர்ந்து கொண்டு

வீறுநடை போடு.....
இதனாலேயே
உன்வாழ்வு
வசந்தமாகுமே தவிர
வசந்தத்தினை
எதிர்பார்த்து
காத்திருப்பதாலல்ல....

வெற்றிவேல் - ஜெயகலா.

மட்டுநகரில் தினக்கதிர்
விநியோகஸ்தர்
கிசோனா றேடர்ஸ்
சென் அந்தனிஸ் றோட்
மட்டக்களப்பு




வெளியீடு: நிகரி 4. ஜயரட்ண அவனியூ, கொழும்பு -5
விலை 50/=

90 களுக்கு பின்னர் வெளிக்கிளம்பிய கவிஞர்களில் கவிஞர் எம்.கே.எம்.ஷகீப்பும் ஒருவர். பேருவளை ஜாமியா நளீமியா கல்விக்கூட பட்டதாரியான இவர் தற்போது சரிநிகர் ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கிறார். ஷகீப்பின் படைப்பு நிலையில் இவர் தனது சுயமான கவிதைகளை விட ஆர்வம் காட்டியதும் ஆளுமை செலுத்தியதும் மொழிபெயர்ப்பு கவிதையிலாகும். இயல்பாகவே கவிதை ஆர்வமும் சமகால இலக்கிய பரீட்சியமும் நிறைந்திருந்ததனால் இவரது கவிதைகளும் வெறுமனே மொழி பெயர்ப்பு என்றில்லாமல் கவிதையாகவே தோற்றம் காட்டின. "நாளை இன்னொரு நாடு" என்ற இக்கவிதைத் தொகுதி கவிஞரின் முதல் மொழிபெயர்ப்புக் கவிதைக் தொகுதியாக மலர்ந்துள்ளது. தனது பாடசாலைக் காலங்களிலேயே அரபு மொழியில் அதிகம் ஆர்வம் கொண்டு அரபு மொழியையும் கற்றுத்தேறி அம்மொழி கவிஞர்களின் கவிதைகளையும் நேரடியாக தமிழிற்கு தந்து ஆரம்ப காலங்களில் கலை இலக்கிய ஏட்டில் எழுதத் தொடங்கி திருமலை நில்ஷா என்ற பெயரிலும் ∴பீனிக்ஸ் மூன்றாவது மனிதன் போன்ற இலக்கிய இதழ்களிலும் எழுதி வந்தார்.

இன்றைய காலங்கள் எமக்கு குறியாகியாகியுள்ளது. தேசிய விடுதலை போராட்டம் நடைபெறும் நாடுக ளில் எல்லாம் ஏதோ ஒரு இனம் குத்திக்குதறப்படுகிறது. அவர்களது வேதனைகள், அந்த சோகங்கள் கவிதைகளாக வெளிக்கிளம்பும் போது அவை அதிரடித் தாக்குதலாகின்றன.

இத்தொகுப்பில் ஈழம் பாலஸ்தீன் பொஸ்னியா போன்ற நாடுகளின் விடுதலைப் போராட்டகால கவிஞர்களின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அஸ்ராஅப்பாஸ் என்ற பாகிஸ்தான் கவிஞரின் நாடு கடத்தலின் ஆரம்பம் என்ற கவிதை.இது எமக்கும் பொருந்துமோ?

"செய்தியெங்கும் பரவியாயிற்று
நான் என்வீட்டு ஜன்னல்களை
எல்லாம்மூடி
விளக்குகளையும் அணைத்து
விடுகிறேன்.
ப்ரிஜ்ஜிலுள்ள
உணவுகளையெல்லாம்
அயலவர்க்காய் எடுத்து
வைக்கிறேன்
எஞ்சியுள்ள பாலை
அடுத்த வீட்டு பிள்ளைக்கு
கொடுக்கலாம்.
இதம் தருகிற ஒரு கிளாஸ்
குளிர்நீர் எனக்குப்
போதுமானது.
நான் அருந்துகிறேன்.
மாலையில் அல்லது இருட்டில்
ஏதோ ஒரு பொழுதில்
உத்தியோகபூர்வ
வாகனமொன்றில் அவர்கள்
வந்து
உத்தியோகபூர்வ
பிணவறைக்கு கூட்டிப்போவர்.
பின் நாடு கடத்தப்பட்ட
ஏனையோரைப் போல்
என்னையும் கொல்வர்.

அக்கரைப்பற்றில்
எமது தினக்கதிர்
முகவர்
பாத்திமா புத்தகசாலை
சாகாம வீதி
அக்கரைப்பற்று

ஆரையம்பதியில்
எமது விற்பனை முகவர்
மதி குரோசரீஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி-02

## நமது நூலகம்



### தூண்டில்

திருகோணமலை திருக்கடலூர் இளைஞர் நற்பணிமன்றத்தின் வெளியீடான தூண்டல் பல்சுவை மாத இதழ் கிடைக்கப்பெற்றோம். இளைய சமூகத்தின் எழுச்சி மிக மன உணர்வின் பிரதிபலிப்பாய் இம்மலர் மலர்ந்துள்ளது. கவியரங்கம் காதல் காற்றினிலே, இலக்கியப் பேரவை, கேள்விக்கென்ன பதில், கடலூர் செய்திகள், தெரிந்து கொள்ளுங்கள், தத்துவசாரல் போன்ற தலைப்புக்களில் பல இலக்கிய அறிவியல் படைப்புக்கள் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை கவிராயர் வில்வராயரை அறியாதவர்கள் கிடையாது. அவரது மகனின் பேட்டியும் இவ்விதழில் உண்டு. தூண்டிலை அதிக பட்சம் அழகான ரோணியோ இதழாக வெளிக் கொணர இளைஞர் நற்பணி மன்றமும், அதன் ஆசிரியர் செ. கலாதரன் முயலல் வேண்டும் *தூண்டல் வளர வாழ்த்துகிறோம்.*

### அம்மா

பிரபல சிறுகதையாசிரியரும் கவிஞருமான திருமலை சுந்தா அவர்கள் தனது அன்னையின் மறைவினை ஓர் வாழும் கவிதையாக்கியுள்ளார். மனித உணர்ச்சிகள் தூண்டப்படும் போது உணர்வுகளாய் வடிவம் பெறுவதே கவிதை. கவிதைக்கு காலம், நேரம் என்றில்லை. இது தான் கவிதை என்று எவராலும் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. ஏனென்றால் கவிதையை எந்தப் பிதாமகனும் தனது பைக்குள் வைத்திருக்கவில்லை. கவிதாநதி பிறவாகமாய் பொங்கி நுரைத்து ஓடிக் கொண்டிருக்கிறது. விரும்பியவர்கள் அதில் மூழ்கி எழுகிறார்கள். காலா காலமாய் இதுவே நடக்கிறது.

இங்கு தனிமனித சோகம் பொதுமைப்படுத்தப் பட்டுள்ளது. தனது அன்னையின் இழப்பை கவிஞர் அனைத்து கவிஞர்களுக்கும் உரியதாக்கியுள்ளார். திருகோணமலை மண்ணின் பிரபல கவிஞர்கள் முதல் கவிதைத் துறைக்கு புதிதாக அறிமுகமாகியவர்கள் வரை மொத்தம் பதினைந்து கவிஞர்களின் கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளது. இந்த வெளியீட்டின் மூலம் திருமலையின் இலக்கிய முயற்சிகளுக்கு ஒரு புதிய வெளியீட்டகத்தின் பிரசுரம் நிகழ்ந்துள்ளது. இனிமேல் அம்மா பதிப்பகம் தொடர்ந்து தனது வெளியீடு களை வெளியிடவுள்ளது.

கவிஞர்கள் தாமரைத்தீவான், அ.கௌரிதாசன், திருமதி. நாகராணி ஸ்ரீதரன், சு.வில்வரெத்தினம், கனகசபை தேசகடாட்சம், செல்லையா நவசோதிராசா, ஜெகதர்மா, மு.பொ.புரட்சிபாலன், திருமதி . ப.தர்மலிங்கம் ,சிகண்டிதாசன், க.கோணேஸ்வரன், திருமதி அன்னலெட்சுமி, சுப்பிரமணியம், திருமலை சுந்தா ஆகியோரின் கவிதைகள் அம்மா புகழ் பாடுகிறது. அம்மா தொகுப்பில் இருந்து க.கோணேஸ்வரனின் கவிதையில் சிலவரிகள்.

உலகத்தில்அவளில்லை என்றானபோதிலும்
உள்ளத்துள் என் அன்னை வாழ்கின்றாள் - என்றன்
உயிர்துடிக்கும் இதயமாய்ச் சிரிக்கின்றாள்.
விலகாத பந்தமாய் வாழ்கின்ற வேதமாய்
விடியலாய் என் அன்னை நிற்கின்றாள்- என்னுள்
வேரோடி விழுதாகக் காக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நண்பர்கழகம்**

பெயர்:..............................
முகவரி:..............................
வயது:..............................
பொழுது போக்கு:..............................
..............................

# நீ புறக்கணிக்கப்படும் பொழுது

ஷீலா சாக்

சமுதாயத்திலும் உறவினர்களாலும், ஏன் நாமே நம்மைப் புறக்கணிக்கும் போது உணர்ச்சிகள் நம்மை சித்திரவதை செய்யும். ஆனால் நாம் அப்படியே இருந்துவிடத் தேவையில்லை. நமக்கும் எழும்பிப் பிரகாசிக்கும் வாய்ப்பு உண்டு!

எப்போதாவது நீங்கள் உங்களைச் சுற்றியிருக்கும் நண்பர்களாலோ உறவினர்களாலோ ஏன் பெற்றோர்களால் கூட ஒதுக்கப்படுவதை போல் உணர்ந்திருக்கிறீர்களா...? அல்லது உண்மையாகவே ஜாதி, பணம், வசதி, பதவி, நிறம் என்பதன் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறீர்களா! புறக்கணிப்பு ஒரு கொடிய நோய் அதை வளரவிடாமல் தடுத்து அதை எதிர்த்து ஒரு நம்பிக்கையுள்ள வாழ்க்கை வாழ முடியும்.

## காரணங்கள்

புறக்கணிப்பு ஓர் கொடுமையான உணர்ச்சியாக இருந்தாலும் நம்மில் அநேகரை அது என்றாவது ஒரு முறை வதைக்கத்தான் செய்கிறது. புறக்கணிப்பு என்பது "நாம் நேசிக்கின்ற சிலரால் நாம் ஒதுக்கப்படுகிறோம் என்ற உணர்ச்சியால் பாதிக்கப்படுதல்" இப்படிப்பட்ட ஒரு கொடிய உணர்ச்சி நமக்குள் எழ அநேக காரணங்கள் இருக்கலாம். நாம் வாழ்க்கையில் உடல்பூர்வமாகவோ, வார்த்தைகளாலோ, உணர்ச்சி பூர்வமாகவோ, மற்றவர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது ஏமாற்றப்பட்டாலோ, அல்லது காயப்படுத்தப்பட்டாலோ, நாம் உடனே தனிமையடைந்து, மற்றவர்கள் தன்னை சொந்த ஆதாயத்துக்காக மட்டும் பயன்படுத்த தன்னை ஒதுக்குகிறார்கள் என்ற கொடுமையான சிந்தனைக்குள்ளாகிறோம். ஒரு வீட்டிற்குள் பெற்றோர்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகள் பிள்ளைகளுக்குள் இருக்கும் பாதுகாப்பு உணர்ச்சியை உடைத்து "நம்மை நேசிக்க யாரும் இல்லை" என்கிற ஒருவித புறக்கணிப்பு சிந்தனையை உருவாக்கிவிடும். தத்து எடுத்து வளர்க்கப்படும் பிள்ளைகள் தாய் மரித்துப் போனதினால தன் தந்தை மறுமணம் செய்திருக்கும் பெண்ணிடம் (Step Mother) வளரும் பிள்ளைகள் இரு நபர்களுக்கிடையில் உள்ள நட்பில் பிணக்கு ஏற்படும். அதனால் ஒருவித மனக்கசப்பில் வாழும் நபர்கள் தன் கணவரிடமோ, மனைவியிடமோ, முழு அன்பும் கவனிப்பும் பெறாதவர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள் ஆகிய இந்த சார்பினர் இந்தக் கொடிய நோய்க்கு அதிகபட்சம் ஆளாகிறார்கள்.

## சிந்தனை விதைகள்

நம் வாழ்க்கையில் சிறுவயது முதல் நடக்கும் அநேக நிகழ்ச்சிகளின் வாயிலாக இந்த உணர்ச்சி விதைகள் நம் மனதிற்குள் சென்று விடுகிறது. அது நாளடைவில் வேரெடுத்து வளர்ந்து பின்பு ஒரு புற்று நோய் போல மாறிவிடுகிறது. எப்பொழுதும் தன்னைப் பற்றி தாழ்வான சிந்தனையையே சிந்தித்துக் கொண்டு இருப்பது இந்த விதைகளை வேரெடுக்கச் செய்கிறது. நாம் எதை விதைக்கிறோமோ அதன் கனியைத்தான் நாம் அறுப்போம். எப்பொழுதும் நாம் நம்மைப்பற்றி தாழ்வான சிந்தனையையே யோசித்துக் கொண்டிருப் போமானால் ஒரு சில நாட்களிலேயே நம்முடைய உணர்ச்சிகளை அச் சிந்தனைகள் பாதிக்கும் பின்பு அது வளர்ந்து நம் மனப்பான்மையையே மாற்றிவிடும்.

என்னிடத்தில் ஏதோ ஒரு குறை இருக்கிறது. யாருக்கும் நான் பிரயோஜனமானவன் அல்ல என்று நம்மைப் பற்றி எதிர்மறையான (Negative) சிந்தனையையே வளர்த்துக் கொள்வோமானால் நாம் விரைவில் அதன் கனிகளையே அறுப்போம். வெகுவிரைவில் நாம் கோபம் குறை கண்டுபிடித்தல், சுய அனுதாபம் என்னும் உணர்ச்சிகளால் பிடிக்கப்படுவோம்.

## இடம் தவறிய நம்பிக்கை

புறக்கணிப்பு உணர்ச்சி முதலில் பாதுகாப்பின்மை என்ற உணர்ச்சியின் மூலமாய் வருவது. நிலையில்லாத காரியங்களின் மேல் நம் நம்பிக்கையை வைப்பதால் தான் நமக்கு பாதுகாப்பின்மை ஏற்படுகிறது. மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ நம் படிப்பையும், நாம் வைத்திருக்கும் சொத்துக்களைப் பற்றியும் என்ன நினைப்பார்களோ என்ற பயம் நம்மை அநேக நேரங்களில் பின் தொடர்கிறது. காலத்தினால் ஏற்படுகின்ற மாற்றங்களினால் தான் நம்பியிருந்த பொருள் அல்லது நண்பர்கள் மாறும் போது ஒருவிதமான பயமும், பாதுகாப்பின்மையும் நம்முள் சுரக்கின்றது. இதனால் நமக்குள்ளாக நாம் ஒருவராகவும் சமுதாயத்துக்கு நாம் வேறொருவராகவும் நடந்து கொள்ள நாம் முயல்கிறோம்.

## நல்ல செய்தி

இதில் நல்ல செய்தி என்னவென்றால் நாம் நிலையில்லாக் காரியங்களில் நம்பிக்கை வைப்பதை கைவிட்டு நிலையான காரியங்களின் மேல் நம் நம்பிக்கையை வைப்பதன் மூலம் இப்படிப்பட்ட நிலையற்ற கொடிய உணர்ச்சிகளிலிருந்து நாம் விடுபட்டு நிலையான ஒரு வாழ்க்கையை வாழமுடியும்.

## பருவம்

பால் வடிந்த கன்னத்தில்
அரும்புகளின் கரு முடிகள்
அக்குள்களிலும் அந்தரங்க
இடுக்குகளிலும் கூட
அதிகம் வியர்த்து
எளிதில் பிசுபிசுத்து
உறுத்துகின்றன அப்பகுதிகள்
இதுநாள் வரையில்லா
புது நாற்றத்துடன்
அனிச்சையாய் விரல்போய்
அன்பாய் தடவிவிடுகிறது
மேலுதட்டை
மீசைக்கருகருப்புக்கு
எதிர்வரும் குமரிகள்
இயல்பு தவறி
பார்வைகளின் நேர்காணலை
தலைதாழ்த்தித் தவிர்த்து
நளினமாய் மாராப்பைச் சரி
செய்து
நடக்கின்றனர்.
பிஞ்சுமனமொன்றைக்
கொன்றபின்
அதன் மழலைச் சொற்களை
அபகரித்தபின்
இயற்கை தரும்
இக்கொடைகள்
வேண்டாமெனக்கு
கேளாமல் முளைத்த
அவற்றைப்
பிடிங்கி எறிகிறேன்.
வயதை எரித்து சாம்பலாக்கி
உள்ளத்தில் வெகுளி ததும்ப
சிறு குழலியாகிறேன்.
அப்பா...............
உன் தோள்பிடித்துக்
கொள்கிறேன்
நீ ஜட்டி போட்டு விடு
எப்போதும் போல்
அம்மா............
தாய்மையால் குழையும்
மார்பழுத்த
என்னை இடுப்பில் வாங்கிக்
கொள்

மகுடேஸ்வரன்.



## சினிமா உலகம்

## குண்டுப்பாப்பா மந்த்ரா .......

குஷ்பூவுக்கு அடுத்தபடியாக செல்லமாக குண்டுப்பாப்பா என்று அழைக்கப்படுபவர் மந்த்ரா. பிரியம் படம் மூலம் அறிமுகமான இவர் அந்தப் படத்தின் தயாரிப்பாளர் அசோக் சாம்ராஜிடம் ஒட்டிக் கொண்டார். அதனால் தயாரிப்பாளரும் இந்த அம்மணிக்கு நல்ல பப்ளிசிட்டி கொடுத்தார். இன்னொரு கட்டத்தில் வாட்டசாட்டாக இருந்த அருண்குமாரை பார்த்து ஜொள்ளு விட்டாராம். பதிலுக்கு அருணும் ஜொள்ளு விட்டார். அருணின் ஜொள்ளைப்பார்த்த பாப்பா எப்படியாவது விஜயக்குமாருக்கு மருமகளாகி விடவேண்டும் என்ற ஆசையில் களத்தில் இறங்கினாராம். இதைப்பார்த்த விஜயக்குமார் "தேவையில்லாமல் ஆசையை வளர்த்துக் கொள்ளாதே சுட்டுடுவேன்" என்று மிரட்ட பாப்பாவும் அருணைவிட்டு விலக ஆரம்பித்தார்.

இவர் நடித்த பிரியம், கங்கா கௌரி, தேடினேன் வந்தது என அனைத்துப் படங்களுமே பிளாப். ஆனாலும் அம்மணி கையில் ஏகப்பட்ட படங்கள். இது எப்படி என்று கேட்கத் தோன்றுமே? அது மந்த்ராவுக்கு மட்டும் தெரிந்த பரமரகசியம். தயாரிப்பாளர்கள், நடிகர்கள், டைரக்டர்கள் இப்படி யாராக இருந்தாலும் அந்த விஷயத்தில் அம்மா படு கெட்டிக்காரி. அதனால் தான் கோடம்பாக்கமே இவர் பின்னால் சூட்கேசும் கையுமாக அலைகிறதோ...?

இவர் ஒரு காலத்தில் இம்பீரியல் ஹோட்டலில் காபரே ஆடியவர் என்று சத்தியம் செய்கிறார்கள் ஹோட்டல் ஊழியர்கள். ஆனாலும் அது சுத்தப் பொய் என்று மறுக்கிறார் மந்த்ரா.... தன்மீது எல்லோருக்கும் "கிக்" ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் அந்தப் பகுதிகள் வனப்பாகத். தெரியவேண்டும் என்பதற்காகவும் ஹார்மோன் இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்கிறாராம். இதைப்பற்றி கேட்டாலும் அப்படி எல்லாம் ஒன்றும் இல்லையே என்று சிரிப்புடன் மறுக்கிறார். இவரது தந்தை ஒரு காலத்தில் பீடா பான்பராக் விற்றவராம். இது பற்றிக் கேட்டாலும் அது உண்மையல்ல என்கிறார். ம்....... இவரைப்பற்றி மற்றவர்கள் சொல்வதெல்லாம் பொய் இவர் பேசுவது மட்டுமே மெய்என்று நம்புவோமாக....!

## காதலா காதலா

எக்கச் சக்கமாக உடற் பயிற்சிகள் செய்து வாலிபமுறுக்கேறி இருக்கிறாராம் கமல். "காதலா காதலா" படத்தில் பிரபுதேவாவும் கூட நடிக்கிறாரே அவருடன் ஈடுகொடுத்து கமல் கமல் தான் என்று காட்ட வேண்டுமே. அதற்காகத்தான் இத்தனையும். ஆரோக்கியமான கட்டு மஸ்தான துடிப்பான போட்டி!

"ப்ரியம்" படத்தில் மந்த்ராவை அறிமுகம் செய்தவர் பாண்டியன். இவரது அடுத்த படம் தான் பேரழகி. தன் அறிமுகநாயகியையே பேரழகியாக நடிக்க வைக்கப் போய்க் கேட்டபோது மந்த்ரா கேட்ட சம்பளத்தை பார்த்து பேச்சு மூச்சு இல்லாமல் திரும்பி வந்த பாண்டியன் இப்போது தேடுவது புதுமுகம். நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

## ராஜஸ்ரீ

எனக்கு கார்த்திக் மறுவாழ்வு கொடுத்திருக்கிறார். ஆயுசு உள்ளவரை நான் அவரை மறக்கமாட்டேன் என்று ராஜஸ்ரீ நெகிழ்வது சற்று அதிகமோ என்று தோன்றுகிறது. "அரிச்சந்திரா" படத்தில் கார்த்திக்குக்கு ஜோடியாக ஆனால் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார் ராஜஸ்ரீ.

## ஜீன்ஸ்

ஜீன்ஸ் படத்தில் உலக அழகி ஐஸ்வர்யாராய்க்கு அப்பாவாக நடிக்கிறார். எஸ்.வி.சேகர். முதலில் எஸ்.பி பாலசுப்பிரமணியம் ஒப்பந்தமாகியிருந்த காரெக்டர் இது. இப்போது அவருக்கு பதில்



"காதலா காதலா" பிரபுதேவா - கமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி நியூஸ்

## முன்னணியில் கார்த்திக்

இன்றுள்ள சினிமாப் பிரச்சினையில் பிரபல நடிகர்கள் ஒன்றிரண்டு படங்களில் மட்டுமே நடித்துக் கொண்டிருக்கும் வேளையில் நவரச நாயகன் கார்த்திக் மட்டும் நடித்துக் கொண்டிருக்கிறார். விரைவில் வெளிவரவிருக்கும் "கூட்டாளி", "உதவிக்கு வரலாமா", ஆகிய படங்களை தொடர்ந்து ரகு இயக்கத்தில் சுந்தர பாண்டியன், சித்ரா லட்சுமணன் இயக்கத்தில் "சின்னராசா" சிறிய இடைவெளிக்குப் பின் "அரிச்சந்திரா" தொடர்ந்து லட்சுமி மூவிக்காக ஒரு படமும் மீண்டும் எம். கபாருக்காக ஒரு படமும் நடிக்கவிருக்கிறார்.

## சம்பள ஏமாற்றம்

விலைவாசியைவிட படுவேகமாக ஏறுவது எது தெரியுமா....? நடிகைகளின் சம்பளம் தான். "சூர்யவம்சம்" படத்திற்கு முன்வரை இரண்டு லட்சம் வாங்கிய தேவயாணி இப்போது 15 லட்சம். ஒருலட்சம் சம்பளம் வாங்கிய சுவலட்சுமியின் இன்றைய சம்பளம் பத்துலட்சம் யப்பா...... மயக்கம் வருது சாமி.

## பிரபுவை அசத்திய புதிய இயக்குனர்.

தமிழ்த் திரையுலகிற்கு புதிதாய் புயல் வேகத்தில் வந்து கொண்டி ருக்கும் இயக்குனர்கள் வரிசையில் தனியிடம் பிடித்திருப்பவர் எஸ்.டி.ராஜ்குமார். டைரக்டர் கே.எஸ் ரவிக்குமாரிடம் உதவியா ளராக [illegible]ருந்த [illegible] பல படங்களுக்கு கதை வசனமும் [illegible]மெடி (Comedy) டிராக்கும் எழுதியிருக்கிறார். எஸ்.ஏ.சந்திர சேகரின் "ஒன்ஸ்மோர்" படத்திற்கு வசனமெழுதி இருப்பதோடு "எம் புருஷன் குழந்தை மாதிரி" படத்திற்கு கதை வசனம் எழுதுகிறார். இருபத்தியெட்டு வயதில் இயக்குனராக வேண்டும் என்ற இவரது கனவு "பொன்மனம்" படத்தின் மூலம் நனவாகி இருக்கிறது. கதை சொல்வதில் வல்லவரான இந்தக் காரைக்குடி இளைஞர் "பொன்மனம்" கதையைப் பிரபுவிடம் சொல்லி அசத்தியே விட்டாராம்.

சேகர்! அப்பா பிரமோசனுக்கு ரொம்பவே யோசித்தாராம் சேகர். பெரிய சம்பளமும் பேரழகியின் கிட்டத்து வாய்ப்பும் தான் அவரை அசத்திவிட்டதாம்.

## ஸ்நேகா ஸ்நேகம்

மோனிஷா படத்தில் அறிமுகமாகும் கதாநாயகிகளில் ஒருவர் ஸ்நேகா. பம்பாயில் நம்பர் வன் மாடலான ஸ்நேகா [illegible]பால் [illegible]டிஷ்காரி. அம்மா டூரீஸ்டாக [illegible] போன இடத்தில் அங்கே பிறந்ததால் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றவர் சிநேகா.



கொண்டாட்டம் அர்ஜுன், சிம்ரான்

## நட்சத்திர முகவரிகள்

**அம்ருதா**
பிளாட் எண் D-4
நெல்சன் சேம்பர்ஸ்.
115 நெல்சன் மாணிக்கம்ரோடு.
சென்னை - 600029

**பார்த்தீபன்**
23, வீரப்பா நகர்
வளசரவாக்கம்.
சென்னை -600093

**அருண்குமார்**
63, 3-வது தெரு
கலைமுகன் நகர் -
ஈக்காடுதாங்கல்
சென்னை -600097

**சிந்து**
(பின்னனி பாடகி)
280, நடேசநகர்
2வது மெயின்ரோடு.
விருதம்பாக்கம்.
சென்னை -600092.

**ராஜேஸ்வரி (பத்மஸ்ரீ)**
2/A இரண்டாவது பிளாக்
சென்ஸ் என்கோவ்
1 ராமகிருஷ்ணா தெரு
தி.நகர்.
சென்னை -600017.



ராஜஸ்ரீ

## ரோஜாவின் ராஜா

நடிகை ரோஜா இப்போது தெலுங்கில் ஏகபிஸியாக இருந்தாலும் தமிழ் படங்களைத் தவறவிடுவதில்லை "கடவுள்" படத்தில் அம்மன் பக்தையாக மேக்கப் இன்றியும், "அரசியல்" படத்தில் தங்கை ரோலிலும்,(ஜோடியாக நடிக்கவிருந்த அப்பாஸ் கால்ஷீட் கிடைக்காதலால் டூயட் மிஸ்ஸிங்) நடித்திருந்தாலும் எந்த லாங்க்வேஜாக (Language) இருந்தாலும் கௌரவ வேடம் மட்டும் செய்ய மாட்டேன் என்கிறார். இவரது ராஜாவான ஆர்.கே.செல்வமணியின் திருமண வயது எப்போ? என்று கேட்டால் எனக்கு இன்னும் திருமண வயது வரவில்லை. நடிகைகளைக் காதலித்தால் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்கிறார். (மகா பொறுமையப்பா...)



மந்த்ரா

கீர்த்தி ரெட்டி



# கேள்விகளுக்கு சிம்ரான் 'கேள்வி'யிலேயே பதில்

"தேரே மேரே சப்னே"யில் [illegible]டங்கி, திரை உலகில் புதுமுகமாக [illegible]ந்து - தமிழுக்கு வந்து "நேருக்கு நேர்" [illegible]ச்சூடவா" "வி.ஐ.பி." "ஒன்ஸ்மோர்" [illegible]லுங்கில் "ப்ரியா ஓ ப்ரியா" "தெனாலி [illegible]ஜா" ஆகிய படங்களில் தோன்றி நடித்து. [illegible]ன்று கவர்ச்சிப்புயலாக கலை உலகைக் [illegible]க்கிக் கொண்டிருக்கும் சிம்ரான் நடித்து [illegible]டுத்து வெளிவரவிருக்கும் படம் [illegible]காண்டாட்டம்". மேலும் சில படங்களில் [illegible]க்க ஒப்பந்தமாகியுள்ள சிம்ரான் [illegible]ரைவில் ரஜனியுடனும், கமலுடனும் [illegible]ாடியாக நடிப்பார் என்பது பரவலான [illegible]ிர்பார்ப்பு.

"கொண்டாட்டம்" படப்பிடிப்பில் [illegible]ரானிடம் கேட்ட "சுருக்" கேள்விகளும், [illegible]வர் அளித்த "நறுக்" பதில்களும்....

[illegible]: "தேரே மேரே சப்னே"யைத் [illegible]தாடர்ந்து இந்தியிலேயே [illegible]த்துக்கொண்டிருந்தால்...?

[illegible] அப்புறம் தமிழிலும். தெலுங்கிலும் புயல் [illegible]கப் புகழை அடைந்திருக்கமுடியுமா?

[illegible]: உங்களை "கவர்ச்சிப் புயல்" [illegible]ன்கிறார்களே, அதைப்பற்றி?

[illegible] பத்திரிகைகள் அளிக்கும் [illegible]டங்களுக்கு நானா பொறுப்பு?

[illegible]: நீங்கள் தமிழுக்கு வந்ததிலிருந்து [illegible]ங்கே பல நடிகைகள் வயிற்றில் [illegible]ரியைக் கரைத்து விட்டீர்களே?

[illegible] வயிற்றில் புளியைக் கரைப்பது என்றால் [illegible]ன்ன?

[illegible]: குறுகிய காலத்திற்குள் ரசிகர்களிடம் பெரிய ஆதரவைத் தேடிக் கொண்டதின் ரகசியம் என்ன?

ப: இந்தக் கேள்வியை நீங்கள் ஏன் ரசிர்களிடம் கேட்கக் கூடாது?

கே: உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?

ப: "இல்லை" என்று யாராவது உங்களிடம் சொன்னார்களா, என்ன?

கே: கொடுத்த கால்ஷீட்டை சரிவர "மெய்ன்டெய்ன்" பண்ணுகிறீர்களா?

ப: இல்லாவிட்டால் இந்த ஆண்டு இறுதிவரை.. ஏன் அடுத்த ஆண்டின் பாதி வரை கால்ஷீட்ஸ் கொடுத்திருக்க முடியுமா?

கே: உங்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்திய சம்பவம்?

ப: ஒன்றா, இரண்டா... எடுத்துச் சொல்ல?

கே: உங்களுக்கு சோர்வைத் தந்த சம்பவம்?

ப: சோர்வா? அப்படி என்றால் என்ன?

கே: மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது உண்டா?

ப: வழக்கமான இதே கேள்வியை தவிர்த்து விட்டு வேறு கேள்வியை மாற்றி கேட்கமாட்டீர்களா?

கே: உங்களது கவர்ச்சிக்கு காரணம் உங்களது கண்களும், உயரமும், உடலழகும் தான் என்கின்றேன் காமென்ட்ஸ், ப்ளீஸ்!

ப: அப்படியா!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுகதை




ஓட்டமாவடி - அறபாத்

கிடுகுகள் உதிர்ந்து வெறும் மிலாரினைத் துருத்தியபடி வேலிகள். வேலி மறைவில் நடமாடும் சதைவறண்ட மாந்தர்கள். நேற்றிரவு ஒட்டிவிட்டுப் போன அநாமேதையப் பிரசுரங்கள் வழிச்சீண்டலுக்கு வழிபார்த்திருந்தன. விடிந்ததும் "ஷெல் விடுதூது" ஆரம்பித்தாயிற்று. மரண ஓலத்தை சுமந்து கொண்டு தெருநாய்கள் ஊளையிட்டன. கடதாசி ஆலைக்கு வேலைக்குச் சென்றவர்கள். போனவேகத்தில் வீடேகினர். அந்தக்காலப் பண்டிகைத் தினங்களை நினைவூட்டும் டப்டப் ஓசைகள்.

காந்தன் சதாசிவத்தின் ஒழுங்கையில் இறங்கினான். கள்ளிச்செடி இருளாய் அடர்ந்து ஒழுங்கை மருங்கினை ஆக்கிரமித்திருந்தது. வெட்டியான் குறுக்கே விரைந்து போகிறான். பொழுதுக்குள் அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் அவனுக்கில்லை. சதா ஓய்வற்ற வேலை. நிலத்தை துவம்சம் செய்தபடி இறக்கை கட்டிக் கொண்டு போகிறான். வேலாயுதத்தின் ஆளுயர சுற்று மதில் இடுப்பளவு சிறுத்துப் போயிற்று. பரிசாரியின் வளைவில் நிதானித்து கோயிலடி வீதிக்கு பாதையை முறித்தான.

கோயிலடி மட்டும் சுறுசுறுப்பாயிருந்தது. எதுவரினும் அவற்றையெல்லாம் மீறி வாழ்வின் சுகந்தத்தை சகித்து வாழத்துடிக்கும் சத்திய ஆவேசம் சனங்களுக்கு வெறுங்கோவணத்துடனும், திறந்த தேகத்துடனும் இழுவை மாடுகளை விரட்டிக் கொண்டிருந்தனர் உழவர்கள்.

ஊர் ஆதிக்குத் திரும்பி விட்டதில் பாட்டிமாருக்கு புளகாங்கிதம்.

ஆலயடியில் கூட்டம் வழிந்தது. நேற்றுப் பெய்த சிறு மழைக்கு அங்கு ஒட்டியிருந்த "இந்தியன்" போஸ்டர் ஈரலித்து. சொதசொதத்தது. கமலின் கீறல் விழுந்த கிழமுகத்தைக் குத்திப்பார்த்து குதூகலித்தனர் சிறுவர்கள். ஆலமரம் கண்ணுருட்டி உறுமுமாற் போல் ஒருக்களித்துச் சாய்ந்திருந்தது.

"ட்றக்டர்களால் மண்கிளற முடியவில்லை. கதிர் செழிக்க உரவகையுமில்லை. ஏர் பூட்டிய காளைகளுக்குநல்ல கிராக்கி. சாணியும் வைக்கோலும் எரிக்க வைத்த நிலத்தை வெறியூட்டப்பழகிவிட்டனர். ஆதிகாலத்து உயிர்ப்பும், நவீனத்தின் எச்சங்களுமாய்மக்கள். ஆங்கில மருந்துகள் வருவதில்லை. கைமருந்துகள் களைகட்டத் தொடங்கிற்று. பொக்கைவாய் கிழவிகள் கட்டாந்தரையில் சாவகாசமாய் அமர்ந்திருந்து மருத்துவ ஆலோசனை. சொல்லி வந்தனர்.

"எடிபொடிச்சி உன்ர மகனுக்கென்ன காய்ச்சல் குரயலியா? ஆடாதோட கிள்ளிப்போட்டு, மரமஞ்சல் சுரங்கை நறுக்கிப்" போட்டு கொத்தமல்லி அவிச்சுக்குடு" "என்னடா நாதன் கைப்புண்ணு இன்னும் ஆரலியா"? "இல்ல ஆச்சி. ஆஸ்பத்திரி மூடிக்கிடக்கு. மருந்து வரலியாம்." "என்னடா பெரிய ஆஸ்பத்திரி, கையாந்தவரயக் கசக்கி சாத்தோட கட்டுடா சரியா போயிடும். மருத்துவிச்சிக்கு தலைக்கனம். அவள் மவுசில் வயிற்றுச் சுமை அந்தரப்பட்டது. எரிகிறவீட்டில் பிடுங்கித் தின்னும் தர்மம் யாரையும் விட்டு வைக்கவில்லை.

வயலோர மதகில் தாளம் பூக்கள் பூத்துச் சிரித்தன. இன்னும் பிற காட்டுப் பூக்களின் கதம்ப மணம். மேட்டு நிலத்தில் கரும்புச் சோதனை. எல்லாவற்றிலும் மண்ணின் வாளிப்பு.

அத்தாங்கை சுமந்து கொண்டு சில பள்ளிக்கூட. வாண்டுகள் இரைந்து வந்தன.

"டேய் பள்ளிக்கூடம் போகாமை இஞ்சமீன் பிடிக்க வாரியளோ? போங்கடா போய் படிங்க. காந்தன் அவர்களை நிறுத்தி வைத்து உருட்டத் தொடங்கினான். "அண்ணே திட்டாதிங்க. நேத்தே பள்ளிக்கூடம் மூடிட்டாங்க". ஏனடா..

"இப்ப அங்க தியாவட்டவான் அகதியள் படிக்கிறாங்க." கொல்லென்று விட்டு அவனைக் கடந்து போனார்கள்.

காந்தன் கிராமத்தை வலைப்பது அரிது. ஒரு நூறுருபாய் கைமாத்து வாங்க, காட்டுவெள்ளம் போல் எதிர்ப்பட்ட திசையெங்கும் கால்களை பாயவிட்டான். கொக்கின் சிறகாய் வானம் வெளுத்துக் கிடந்தது. மேகத்தினுள் ஒளிந்திருக்கும் இன்றிரவின் பேரிடியை நினைத்துக் கொண்டான்.

கொட்டாரின் ஒழுங்கை முனைவில் வால்பூட்டி நின்ற தெருநாய்கள் அரவம் கண்டு அவதிப்பட்டன. குறி விறைத்த இன்னொன்று பெட்டையின் கடையை வெறித்தபடி. பதறித்திரிந்தது. சுக்கிலம் கழறாத கல்விப்பொறி. கொட்டார் அண்ணண் வாழைத்தோட்டமும் செய்கிறார். ஆபத்தில் உடலை கிடத்தி மறைக்கத் தோதான இடம்.

எதிர் வீட்டில் கூக்குரல்கள்.

"காந்தன் கெதியா ஓடியாப்பா. அந்த அலறலில் கைமாத்து வாங்கும் எண்ணம் மறந்து போயிற்று.

"என்ற மகனைக் கொண்டு போறாங்கள்"

"அதற்கு நானென்ன செய்யேலும்"?

"உன்ற பிள்ளையன்டா இப்பிடி கேப்பியா. ஊருக்கு அவங்கட பாஷ தெரிஞ்சவன் நீதான். போராசா, கைய காலா நெனச்சிப் புடிக்கன். என்ற மோன் கொழும்புலேர்ந்து இப்பதாண்டா வந்தான். அவனுக்கு இஞ்ச ஆரயும் தெரியாதென்டு சொல்லுராசா. ஆர்ர கண்பட்டதோ, பாடயில போவானுகள் எந்தக் கோவமோ. பெற்றவளின் மனக்குமுறல் இந்தத் தேசத்தின் தாய்மார்களே இப்படித்தானே குமுறி வெடிக்கின்றனர்.

காந்தன் எதிர்த் திசையில் விரைந்தான். தகித்துக் கொண்டிருந்த மனம், பிடிக்குள் அடங்காத முரட்டுக்காளையாய் திமிரத் தொடங்கிற்று. எனினும் அவனால் ஆனது ஒன்றுமில்லை. அவர்களளவில், இது இலக்குத் தவறா வெற்றிப் பெருமிதம்.

"செல்லாச்சி நீபோ," ரெட்குரோஸ்காரன்ட கந்தோருக்குப் போய், காணாமப்போனவங்கட, பட்டியல்ல உன்ற மகன்ட பேரையும் பதிஞ்சு வெ[illegible] போங்க ஆம்புளப்புள்ளயல் இருக்கிற எல்லாரும் போங்க. காந்தனுக்கு மட்டுமா சித்தவெறி.

செல்லாச்சியின் முற்றத்தில் அவிழ்ந்து விடப்படாத கன்றுக்குட்டி, வயிற்றை எக்கி எக்கி கதறத் தொடங்கியது. தாய்பசுவின் அலறலில் காந்தனின் நெஞ்சு வலித்தது. கனுவண்டை சென்று அந்தக் கன்றை விடுவித்தான். நாசி விடைக்க, ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். செல்லாச்சி. நிலத்தைப்பிளந்து விடும் ஆவேசம் அவளுக்கு. கைக்கெட்டிய மகனை உச்சி முகர்ந்திடாத பிரேமையின் வெறியாட்டம். சற்றைக்கெல்லாம் இரத்தம் சில்லிட விறைத்துப் போனாள்.

காந்தன் விக்கித்து நின்றான். செல்லாச்சியின் திறந்த விழிகள் அவனை விழுங்குமாற் போல் குத்திட்டு நின்றன. அவனுக்கு மகனின் நினைவு தட்டியது. சின்னவனுக்கு காய்ச்சல் கண்டு எத்தனை நாளாயிற்று. ஊரைச்சுற்றியதில் மூச்சுந் தான் முட்டியது. ஒரு ரவுண்டில் ஏறாத இடமெல்லாம் ஏறியாயிற்று. கைமாத்து இல்லையென்றே சென்றவிடமெல்லாம். வாய்ப்பாடாயிற்று.

பொழுதேறி உச்சிக்கு நின்றது. மயானத்தின் வெக்கை தனியவில்லை. என்று தணியுமோ? சற்றைக்கு முன் புதைத்து விட்டுப் போன, காந்தாவின் மகனின் மேல் பொறாமை வந்தது. பேரிடியை கேட்காத உறக்கம். கைதும் விசாரணையும் மனிதன் என்ற அடையாளத்தை இழக்காததுமான உள்ளுலகம் அது. எந்தக் கொம்பனுக்கும் தலை வணங்காத சௌகாயத் தூக்கம்.

"டேய் காந்தன் எந்தக் கோட்டயடா பிடிக்க, கூப்புர்றதும் காதுல விழாம, "ஆ. மச்சான் சுதாவா" என்னடாப்பா உன்ட சிலமனுமில்ல"

"இப்ப முன்மாதிரி நெனச்ச வாக்கில வெளிக்கிட்டு வரேலுமே" "பேந்தென்ன விஷேசம்"?

"விஷேஷமென்டா கணக்க இரிக்கிடா, நேத்தும் ஒரு விஷேஷம் தான்"

"அதென்ன?"

"அதயேன் கேக்குறாய் நேத்து கடக்கிப் போற வழியில அவங்கள்ட்ட நல்லா மாட்டிட்டான்."

"பிறகு"?

பிறகென்ன மணவெட்டியோ[illegible] நானும் களத்துல இறங்கினனான். ஒரு நாலு சென்றிக்கு மண்வெட்டி குடுத்ததுகள் எங்கட ஏழைச்சனங்கள்.

"வீட்ட ஆம்பளையள் உழைச்சி வருவாங்களண்ட பிள்ளயள்கடப்படிய நிக்கும். உவங்களுக்கு ஒரு நாள் முடிய இனாம் வேல செஞ்சி போட்டு, விரிச்ச கையோட தான் வீட்டுல பட்டினிதான்"

"அதுசரிடாப்பா, என்ட சோகக்கத இருக்கட்டும் நீ இன்டெய்க்கென்ன ஊரைச் சுத்துறாய் கடைக்குப் போகலியோ"?

"இல்ல மச்சான் சின்னவனுக்கு ரெண்டு நாளா காய்ச்சல். கைமாத்து வாங்க நாயலைச்சல். டவுனுக்கு ஒருக்கா கூட்டிப்போகனும். அதுவும் சரிப்படல்ல, இப்ப கடக்கித்தான் போகப்போறன். முதலாளிக்கிட்டத்தான் பல்லக்காட்டணும்.

"அப்ப நான் வாரன்மச்சான், பொழுதுக்குள் பாதைய மூடிப்போடுவானுகள். எதுக்கும் அங்கால போறதென்டா விசாரிச்சுப்போ. சண்டையெண்டும் கதை.

"என்னப்பா புள்ளக்கி - மருந்தெடுக்க போக ரெடியா. இரியண்டுட்டுப் போனனீங்க. ஆறுதலா வாரியள்." ராணியின் எரிச்சல்.

அவன் மௌனியாய் சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியே வந்தான். நெஞ்சுக்குள் பசித்தீயின் கோரத் தாண்டவம். சைக்கிள் அவனை வாங்கிக் கொண்டு விரைகிறது. சைக்கிளுக்கு கோயில் கட்ட ஐதீக மிருப்பின் கட்டி விடலாம். ஒவ்வொரு முகாமாய், அவ்னையும், குடும்பத்தினரையும் சுமந்து சென்ற பல்லக்கு.

"எங்கேயெண்டு சொல்லிட்டுப் போங்களன்?

"முதலாழிய ஒருக்கா பார்த்துட்டு வாரன் ரெடியா இரு"

"படலைக்கப்பாலிருந்து சத்தம் விழுகிறது.

மரமரவென வெய்யில் ஏறிற்று. தலையணைக்குப் பஞ்சு திணிக்கும் திணறலாய், தனியார் பஸ்களின் சனத்திணிப்பு. ஆமையின் நகர்தல் ஒவ்வொரு தடையிலும் இறங்கி, நிரலிட்டு, பொதிபிரித்து அடையாளம் நிரூபித்து பின் அடுக்கி - வீடேகுவதற்குள் சனங்களுக்குள் ஒரு பத்து வயது கூடி விட்ட அவ்சம்.

மகனின் ஜீவனற்ற முகம் மனசிலெழுந்து அழுத்தத் தொடங்கிற்று. புறக்காட்சிகளை ஒதுக்கிவிட்டு நீர்காகத் தலைகளென அழுங்கி எழுந்து... உள்ளதும் ஒன்று ஆணாய் பிறந்து விட்டானே என்ற பரிதவிப்பு வேறு. வாழ்க்கை இருட்டுகையுள் மூடிவைத்த பறவையாய்... இதென்ன உபவாசனை.

நெஞ்சழுத்தத்துடன் பெடலையும் ஊன்றி அழுத்துகிறான்.

நறநறவென்ற எதிர்ப்புடன் விரைகிறது.

இன்று முகிழ்ந்த மயானத்துப் பகையும், சிதையின் வெக்கையும் செல்லாச்சியின் குத்திட்ட பார்வையும், மனசை பிசைந்தன. இன்னும் எங்கேயோ சிதை எரியும் கமறல் மனம் துணுக்குற்றது.

முன்னால் அவர்கள் . நீட்டிய துவக்குடன் விறைத்து நிற்கின்றனர். காந்தனுக்கு இடுப்பு விண்டு போயிற்று இறங்கி. சைக்கிளை உருட்டிக்கொண்டு போனான். அவர்கள் அவனை வன்னமாய் நோக்கினர். பொழுது உச்சியிலிருந்து சரியத் தொடங்கியது. வீதி மருங்கில், புதர் மறைவில் இன்னும் சில உருவங்கள் அடர்ந்தெழுவதைக்கண்டான். வாழைச்சேனைக்கு கிழக்கே புகைமூட்டம், சுருள் சுருளாய் அடர்ந்து. வளையமிட்டு மேலேகி திறைந்தபடி, புகையை வெட்டி முறித்துக்கொண்டு வெள்ளை கொக்குள் மறைகின்றன. குய்யோ குய்யோ என்ற மக்களின் கூக்குரல் "வெலிங்டன்" தியேட்டருக் கப்பாலிருந்து தான் சத்தம் வருகிறது.

காந்தனுக்கு ரெத்தம் சில்லிட்டது. விழிகளுக்குள் இருளடர்ந்து மங்கத் தொடங்கியது. பிடரி நரம்பு சிலிர்த்தோய்ந்தது. யுகங்களுக்கப்பால் தரிசிக்கவிருந்த மரணம் இவ்வளவு விரைவாக அண்மித்து விட்டதே என்ற பரிதவிப்பு. வாழ்வின் மீதுள்ள அதீத பிடிப்பு. அப்படி எண்ணத்தோன்றியது. ராணியின் ஒப்பாரி- சின்னவளின் விம்மல். காற்றில் கரைந்தபடி அவனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. அவர்கள் மிகுந்த குரோதத்துடனும், ஆவேஷத்துடனும் அவனைச் சூழ்ந்து நெருங்கத் தொடங்கினர்.


"முற்றும்"

மூதூர் பிரதேசத்தில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
ராஜாஸ் புத்தகசாலை
நொக்ஸ் வீதி
மூதூர்-03
தொலைபேசி 065 - 38355
உரிமையாளர்:- T. நவரெட்டினராசா.

வவுனியாவில் எமது
தினக்கதிர்
விற்பனை முகவர்.
கே.பி.கே. சென்ரர்.
24, பஸ் நிலையவீதி
வவுனியா.
தொலைபேசி - 024 - 22504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேறி ஆந்தை ◀ சிறுவர்பகுதி ◀



ஆந்தை ஒன்று காட்டில் உட்கார்ந்து தனக்குள் பாட்டொன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அப்போது டொக்.... டொக் என்று எங்கிருந்தோ சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் ஆந்தைக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. சத்தம் வந்த திக்கை நோக்கி அது சென்று, ஒரு மரத்துக்கு அருகே நின்றது. அந்த மரங்கொத்துப் பறவை கொத்திக்கொண்டிருந்தது.

'என் அமைதியை நீ குலைக்கிறாய்? என்று ஆந்தை சத்தம் போட்டது.

'நான் எனக்கு கூடு செய்து கொண்டிருக்கிறேன். உன்னோட பேச எனக்கு நேரமில்லை' என்றது. மரங்கொத்திப் பறவை, தன் பாட்டிற்குத் தனது கூரிய அலகால் அது மரத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

ஆந்தை கோபத்துடன் அந்த இடத்தை விட்டுச் சென்றது.

வழியில் சின்னஞ்சிறு குருவி ஒன்றைக் கண்டது ஆந்தை. அது புல் வெளியில் அங்குமிங்குமாய்ச் சென்று கொண்டிருந்தது.

ஆந்தை அதை வழி மறித்தது. 'ஏ குருவியே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்றது ஆந்தை.

'நான் எனக்கு கூடு கட்டுவதற்காக குச்சிகள் தேடிக்கொண்டிருக்கிறேன். வரட்டுமா?' என்று கூறி விட்டு அந்தச் சின்னக் குருவி அங்கிருந்து சென்று விட்டது.

ஆந்தை ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டது. அப்போது ஏதோ சத்தம் கேட்டது. ஆந்தை அந்த இடத்திற்குச் சென்று பார்த்தது, இரண்டு சிட்டுக்குருவிகள் தானியங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தன.

ஒரு சிட்டுக் குருவி மற்ற சிட்டுக் குருவியைப் பார்த்துச் சொன்னது:

'கூடு கட்டிவிட்டோம். தானியமும் சேகரித்து விட்டோம். இனி மழை காலத்திற்குப் பயமே இல்லை'

'அமாம் ஆமாம்' என்றது மற்ற குருவி.

ஆந்தை மீண்டும் மரக்கிளையில் வந்து அமர்ந்தது. சோம்பலாக இருந்தது. மரக்கிளையில் உட்கார்ந்தபடியே தூங்க ஆரம்பித்தது.

கொஞ்ச நேரத்தில் 'ரீக் ரீக் என்ற ஓசை கேட்டது. ஆந்தையின் தூக்கம் கலைந்தது. கீழே பார்த்தது. புல்வெளியில் வண்டு ஒன்றும் வண்ணத்துப்பூச்சி ஒன்றும் புல்லை நறுக்கி தனக்கு உணவுக்கு எடுத்துக் கொண்டிருந்தது. அது தன் வேலையிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தது.

'உன்னோடு பேச எனக்கு நேரமில்லை அண்ணா....' என்றவாறு சென்று விட்டது வண்ணத்துப்பூச்சி.

ஆந்தை மீண்டும் இன்னொரு மரக்கிளையில் உட்கார்ந்தது.

'சின்னஞ்சிறு வண்டிலிருந்து பெரிய மரங்கொத்திப் பறவை வரை கூடுகட்டி வாழ்கின்றன. என்னால் மட்டும் இது முடியாதா?' என்று அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது. பிறகு சரி சரி இப்போது என்ன அவசரம். கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு அப்புறம் கூடு கட்டுவதைப் பற்றி யோசிக்கலாம்' என்று சத்தமாகச் சொல்லிற்று. சொல்லிவிட்டு குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்தது.

ஒவ்வொரு முறையும் இப்படியே சொல்லிவிட்டு ஆந்தை தூங்கத் தொடங்கிவிடும்.

அதனால்தான் இன்று வரை ஆந்தை தனக்கென்று ஒரு கூடு இல்லாமல் மரக்கிளையில் இருக்கிறது.

*செ.யோகநாதன்,*
*(இளந்தென்றல்)*

## கவிதை பாடுவோம்

### பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள் - மணத்தை
வாரியிறைக்கும் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள் - எங்கும்
காட்சியளிக்கும் பூக்கள்

காலை மலரும் பூக்கள் - அந்திக்
கருக்கலில் பூக்கும் பூக்கள்
சோலையில் குலுங்கும் பூக்கள் - தேன்
துளிர்க்கும் பலவகைப் பூக்கள்

கொடிகளில் தவழும் பூக்கள் - மரக்
கொம்பில் சிரிக்கும் பூக்கள்
செடிகளில் விளங்கும் பூக்கள் - எழில்
திகழும் பூக்கள்! பூக்கள்!!

## அறிந்து கொள்வோம்

| நூல்கள் | - | ஆசிரியர்களும் |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| ஆத்திசூடி | - | ஔவையார் |
| இராமாயணம் தமிழில | - | கம்பர் |
| பெரியபராணம் | - | சேக்கிழார் |
| மகாபாரதம்தமிழில் | | வில்லிபுத்தூரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| பாஞ்சாலிசபதம் | - | சுப்பிரமணியபாரதியார் |
| நற்சிந்தனை | - | யோகர்சுவாமிகள் |
| யாழ்.நூல் | - | சுவாமிவிபுலானந்தர் |
| நளவெண்பா | - | புகழேந்தி |
| நீதிநூல்கள் | - | ஔவையார் |
| மணிமேகலை | - | சீத்தலைச்சாத்தனார் |
| தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| சிந்தாமணி | - | திருத்தக்கதேவர் |

### பிறந்தநாள் வாழ்த்து



மட்டக்களப்பு இருதயபுரம் மேற்கு 8ம் குறுக்குத்தெரு ஆன் ரூபினி பிரான்சிஸ் 30.01.1998ல் 7வது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.



திருகோணமலை லிங்கநகரைச் சேர்ந்த செல்வன்.யோகராஜா ஹர்சன் அன்ரனி (நிலோஜன்) 04.02.1998 அன்று தனது 5வது பிறந்தநாளை தனது பெற்றோருடன் கொண்டாடுகிறார்.



திருகோணமலை 64 சுங்க வீதியைச் சேர்ந்த போன் ரெறன்ஸ் ஷாமினி கிறேஸ் பிரேஷியா 29.01.1998ல் தனது முதலாவது பிறந்த தினத்தை உறவினர்களுடன் கொண்டாடினார்.



கல்முனை மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ மாதர் மாநாடு சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்ற போது நடன விருந்தளித்த சிறுமிகள் செல்வி. அகிலா சலீம் (நிந்தவூர்), செல்வி.எம்.கல்பனா (காரைதீவு) ஆகியோரின் இரு நடனத்தோற்றங்களைப் படத்தில் காண்க.

*(படங்கள், அம்பாறை மாவட்ட நிருபர்)*



மட்டக்களப்பு கூழாவடி 7ம் குறுக்கைச் சேர்ந்த விவேகானந்த மூர்த்தி சிந்துஜா 1-2-1998 அன்று தனது 5வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.



சந்திவெளி முறக்கொட்டாஞ் சேனையைச் சேர்ந்த சிவநேசராசா தக்ஷினி 3-2-1998 அன்று தனது 7வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

### பிறந்தநாள் வாழ்த்து

சிறுவர் சிறுமியர்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் இப்பகுதியில் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி புகைப்படம், பிறப்பு சான்றிதழ் நிழற்பட பிரதி (Photo Copy) என்பனவற்றை இணைத்து 10 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.பிரசுரிக்கப்படும்.

**பிறந்தநாள் வாழ்த்து**

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

பிறந்த திகதி : ..............................................................

..............................................................
பெற்றோர் / பாதுகாவலர்
கையொப்பம்

## படைப்பாளிகளே.......!

தினக்கதிர் வார வெளியீட்டிற்கு தங்களிடமிருந்து தரமான படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், இலக்கியவிமர்சனங்கள். மற்றும் தொடர்கதைகள் போன்றவற்றை எழுதுங்கள்.

எழுதியதை தினக்கதிருக்கு தபாலிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பட்டதாரிகள் அவலம்

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தி கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உள்ளனர்.

இவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காத பட்சத்தில் கிழக்குமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை உருவாக்கி



அதன்மூலம் அரசாங்கத்திற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

ஆனால் எந்த ஒரு கோரிக்கையும் தீர்க்கமான ஒரு பலனை தராத நிலையில் கடந்த 28ம் திகதி மட்/காந்திசிலையருகில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடத்தினர். இதில் மட்மாவட்டத்தைச்சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

பல்வேறு கோஷங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவ்மாணவர்கள் தாங்கி நின்றனர்.

தமக்கு வேலை வழங்குமாறு பலத்தகோஷங்களையும் எழுப்பினர். இப்போராட்டம் அதன் அடுத்த நடவடிக்கைபற்றி மேற்படி ஒன்றிய தலைவர் கந்தையா-உதயகுமார் அவர்களிடம் கேட்டேன். மட்டக்களப்பில் 437 பேரும் திருகோணமலையில் 272பேரும் அம்பாறையில் 247பேரும் பட்டதாரிகளாக உள்ளனர்.

இலங்கை அரசு தென் மாகாணம், மேல்மாகாணம், ஊவாமாகாணம், சப்பிரகமுவாமாகாணம் போன்றவற்றின் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய வேளை தமிழர்கள் என்ற நிலையால் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம்.

தென் இலங்கையில் உள்ள சிங்கள பட்டதாரிகளுக்கு அரசதுறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்கும் அதேவேளை தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனங்கள் தமிழ் பட்டதாரிகளுக்கு வேலைவழங்க மறுக்கின்றன.

வடக்கில் - கிழக்கில் இருந்து செல்லும் இளைஞர்கள் "பயங்கரவாதிகள்" என காரணம் காட்டி தனியார் நிறுவனங்கள் வேலைவழங்க மறுக்கின்றன.

இதனாலேயே கிழக்கு மாகாண பட்டதாரிகள் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக வேலை வாய்ப்பு இன்றி இருக்கின்றனர்.

இதனாலேயே இந்த எதிர்ப்புப்போராட்டத்தை ஆரம்பித்தோம்.

இதுவும் வெற்றியளிக்காத பட்சத்தில் அடுத்த கட்டமாக சுழற்சிமுறையில் உண்ணாவிரதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மட்.மாவட்டட பாரளுமன்ற உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், இராசமாணிக்கம், செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்களால் பட்டதாரிகளுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. வேலையின்மை என்பது நீண்டதொரு பிரச்சனை. மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது அரசின் கடப்பாடுகளில் ஒன்று. இதுபற்றி வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரிடம் தொடர்பு கொண்டு உரையாடினேன் என துரைராசசிங்கம் எம்.பி தெரிவித்தார். எல்லாப்பட்டதாரிகளுக்கும் வேலை



மட்டக்களப்பு காந்தி சிலை அருகில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நடாத்திய எதிர்ப்பு போராட்டத்தின்போது அங்கு சமூகமளித்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொ. செல்வராசா ,கே.துரைராசசிங்கம்,ஈ.பி.டி.பி அமைப்பாளர் அ.இராசமாணிக்கம் எம்.பி ஆகியோரை படத்தில் காணலாம்

## பயங்கரவாதிகள் எனக்கூறி தனியார் நிறுவனங்கள் வேலைவழங்க மறுப்பு

வாய்ப்பு வழங்கமுடியாது. இவ்வருடம் வேலைவழங்க சில திட்டமுண்டு. அரச வர்த்தமானி அறிவித்தலின் பயனாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் தகுதியானவர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தாக அவர் கூறினார்.

இராசமாணிக்கம் எம்.பி அங்கு பேசுகையில் ஆர்ப்பாட்டம், ஊர்வலங்களை மதிக்கிறோம். யுத்தசூழல் காரணமாகவே வேலையற்றோர் பிரச்சனை அதிகரிக்கப்பட்டுள்ளது. 1994ம் ஆண்டில் இருந்தே ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்துக்கும் இப்பிரச்சனையை கொண்டு வந்தேன் என்றார்.

இறுதியாக பொ.செல்வராசா எம்பி கருத்துதெரிவித்தார். வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் வேலைவழங்குவது சம்பந்தமாக அடிக்கடி எம்முடன் தொடர்பு கொள்வர். வடக்கு கிழக்கு மாகாணசபை அதிகாரிகளை சந்தித்து இதுபற்றிக் கேட்டேன். ஜனாதிபதியின் செயலாளர் முகாமைத்துவப் பயிற்சியாளர் களைத்தவிர ஏனையோருக்கு பதவி வழங்கக் கூடாது என அறிவித்து ள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

படப்பிடிப்பு: ஜெயா



இதே வேளை ஜனாதிபதி அவர்களினால் 1000 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளதாக வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் கிஸ்ணமூர்த்தி தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க அவர்களுடனும் இவ்விடயங்கள் பற்றிக்கதைத்துள்ளேன். 94,95ம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு முகாமைத்துவப்பயிற்சி வழங்குவதுடன் 25000 ரூபா அலவன்சாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாகாண அரசிலும் மத்திய அரசிலும் உங்கள் பிரச்சனையை எடுத்துக்கூறி தீர்த்துவைக்க பாராளுமன்ற உறுப்பினராகிய நாங்கள் முயற்சி செய்வோம் எனக்குறிப்பிட்டார்.

மட்டக்களப்பிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அங்கு சமூகமளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை திருகோணமலையில் வடக்கு கிழக்கு மாகாண சபை அலுவலகத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் நடாத்தப்பட்டதுடன் பிரதம செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

பா.வேணுகோபால்

# தமிழ் தேசியத்தின் எழுச்சியாக பொங்கல் விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் தைப்பொங்கல் விழா அண்மையில் விபுலானந்தா இசைநடனக்கல்லூரியில் நடைபெற்றது. விசேட பொங்கல் பூஜை வழிபாட்டின் பின் மட்டக்களப்பு பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி இராசலட்சுமி கைலாசநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி உரையாற்றுகையில் தைப்பொங்கல் விழா தமிழருடைய இனத்தைச் சுட்டும் ஒரு விழாவாகக் காணப்படுகின்றது. விழாக்கள் சமூகத்தின் முழுவிழாவாக அல்லது வைபவமாக இருக்கும். விழாக்கள் இல்லாத சமூகங்கள் இல்லாதது போல் மதங்கள் இல்லாத சமூகங்கள் இல்லை. மதங்கள் இருக்கும் வரை விழாக்கள் இருக்கும். இந்த வகையில் விழாக்கள் இரண்டு மூன்று அம்சங்களின் அடிப்படையாகத் தோன்றும்.

பருவகால மாற்றங்கள்

வாழ்க்கை வட்ட மாற்றங்கள் அல்லது வாழ்க்கை சுழற்சி.

மத ஐதீகங்கள் சம்பந்தப்பட்டது.

பருவகால மாற்றமும், மதஐதீகங்களும் சம்பந்தப்பட்டதும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படும். இதில் பொங்கல் மாற்றத்தில் வரும்.

தமிழ் பண்பாட்டில் நம்பிக்கையும், சடங்குகளும் முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகிறது. இவ்வாறான விழாக்களைச் செய்யா விட்டால் ஒரு மனநிறைவு எற்படாது. இதைச்செய்வதன் ஊடாக ஒரு பாரம்பரிய திருப்தி ஏற்படுகிறது. ஒவ்வொரு மதத்துக்கும் இது ஒவ்வொன்றாகக் காணப்டுகிறது.

கார் காலம் முடிந்து வெயில்காலம் தொடங்கும் காலத்தில் தைப்பொங்கல் முக்கியமானதாகிறது. இது சூரிய வணக்கமாக கொண்டாடப்படுகிறது. மழைகால முறிவு முக்கியமான ஒன்றாகவே காணப்படுகிறது. ஒரு கிராமத்திலிருந்து மற்றக்கிராமத்துக்குச் செல்லக்கூடிய நிலை, உறவினருடன் தொடர்பு கொள்ளக்கூடிய சூழ்நிலை, ஏற்படுகிறது.

தமிழ் பண்பாட்டில் தைப்பொங்கலுக்கு முதல் நாள் போகிப்பணிடிகை நடைபெறும். அடுத்தநாள் தைப்பொங்கலாகவும் கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கலை அடுத்து வரும் மாட்டுப்பொங்கல் முக்கியமான ஒரு விழாவாகும். மாடுகள் விவசாயத்திற்கு செய்யும் நன்றிக்கடனாக மாடுகளுக்கு எடுக்கும் ஒரு விழாவாக ஒர மரபு உண்டு. ஆனால் பொங்கல் விழா உண்மையில் தமிழ் நாட்டில் கால்நடை சம்பந்தப்பட்ட வழிபாடுகளின் அடியாகவே வந்துள்ளது என்று தொல்லியல் ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர். மார்கழி காலத்தில் மாடுகளை ஓர் இடத்தில் கட்டி வைத்து வளர்க்கும் ஒரு மரபு இருந்ததால் பின்னர் கோடைகாலத்தில் சாணம் நிரம்பிய அந்த பிரதேசத்தை எரித்துவிட்டு இன்னொரு இடத்திற்கு மாடுகளைக் கட்டும் ஒரு நிகழ்வு நடப்பது அறியவருகிறது. இவ்வாறு எரிக்கப்பட்ட இடங்களிலே எரிந்த சாணம் திருநீறுபோல் இருப்பதைக் காணலாம். இதனைத்தான் விபூதிமலை எனப்பலர் அழைப்பார்கள். இந்த நடைமுறை பொங்கலோடு சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும் என 'Ollchil" என்ற அறிஞர் எடுத்துக் கூறுவர்.

தமிழ் தேசியத்தின் எழுச்சியுடன் தைப்பொங்கல் தமிழ் மக்களின் பொதுவான மதச்சார்பற்ற விழாவாக போற்றப்படுகின்றது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சியுடன் குறிப்பாக தி.மு.காவின் தோற்றத்துடனும் அண்ணாத்துரையின் தலைமையின் கீழும் இந்தப் பண்பு மெதுவாக வளர்ந்தது. இந்தச் சூழலில் தான் தைப்பொங்கல் உழவர் திருநாளாக போற்றப்படத் தொடங்கிற்று. அண்ணாத்துரையவர்கள் பொங்கலை தமிழர்களின் மேதினம் உன்று கூறினார்.

பொங்கல் என்பது ஒன்றை அதன் பயன்பாட்டுக்கு ஏற்ற நிலையில் வைத்திருப்பது. தானியமாக இருப்பது உணவாக மாறுவது பொங்கல் மூலம் தான். இதனாலேயே பெண்குழந்தை பருவமடையும் போது அவள் சமைந்திருக்கிறாள் என்று கூறினார்கள். (சமையல்-சமைத்தல்). அதனால் பொங்கலை ஒரு குறியீடாகவே கொள்கிறோம். ஈழத்தில் இன்றைய நிலையில் தமிழர்கள் வாழ்வும் பொங்க வேண்டும்.

கலாநிதி.சி.மௌனகுரு பேசுகையில் பொங்கல் விழாவில் பேணப்படுவது எமது பாரம்பரியமாகும். ஆரம்பத்தில் தமிழ்கள் வேட்டையாடினர். பின் ஆடு, மாடுகளை வளர்த்து வேளாண்மை செய்ய முனையும் போது இதற்கு மழை, மண்வளம் தேவைப்பட்டது. இதனால் தான் ஆரம்பத்தில் இவ்விழா மண்விழாவாகக் கொண்டாடப்பட்டது. பின்னரே தைப் பொங்கல் விழாவாக மாறியது.

உரையரங்கையடுத்து கவிதையரங்கு இடம்பெற்றது. கவிஞர் அகளங்கன் தலைமையில் கவிஞர் திமிலைத்துமிலன், செ.குணரத்தினம், திக்வயல் தருமலிங்கம், மண்டூர் அசோகா ஆகியோர் "பொங்குக நலமுடன் தமிழர் வாழ்வு" என்ற தலைப்பில் கவிதை பாடினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. கலாசார உத்தியோகத்தர் செல்வி.க. தங்கேஸ்வரி நன்றியுரையாற்றினார்.

தொகுப்பு:- த.மலர்ச்செல்வன்.

இதயத்தில் இருந்து
"தினக்கதிர்" தொடர்பான உங்கள் கருத்துக்களையும். விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எமக்கு எழுதுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பூவால் குருவி

நெஞ்சுள் தொலையாதிருந்து
ஒரு சிற்றாய் ஊருகின்ற
என் முதல் காதல் பெட்டை...
ஒரு வழியாய் உன்சேதி
அறிந்தேனடி.
பேய்கள் கிழிந்தெரிக்கும் எம்முடைய
தேசத்தின்
வன்னிக் கிராமத் தெருவொன்றில்
வெள்ளிச் சருகை மினுங்கும்
தலையும்
பொன்சருகை கலையாமுகமும்
இன்னும் ஓயாமல் முந்தாணை
திருத்த எழும் கையுமாய்
போனாயாம் உந்தன் பூ ப்படைந்த
பெண்ணோடு
போட்டி சிறுநடையில்
அது என்ன போட்டி.

காவலிலே உன் அன்னை
தோற்றதறிவாய்
அவளிடத்தில் உன்பாட்டி
தோற்றதையும் நீ அறிவாய்
என்றாலும் வாழ்வின் சுழற்தடத்தில்
இன்று நீ அன்னை....
நீ தோற்க வாழ்வு மேலும் ஒரு
வெற்றி பெறும்
ஆனாலும் நீ எனக்கு இன்னும்
சிறுக்கி தான்

இன்னும் விடாயும் அச்சமுமாய்
மிரண்டடிக்கும்
குளக்கரையின் மான்குட்டி

நானுமுன் நெஞ்சத்தில் சிற்றாறா
இன்னும் காலில் விழுந்து கையேந்தி
இரக்கின்ற
திருட்டுச் சிறுபயலா....
அஞ்சி அஞ்சி நாங்கள் அன்று
உடற் கடலில் கைநனைத்து கால்
நனைத்து
நீந்த முயன்றதெல்லாம் எண்ணில்
மேனி இன்பத்துணுக்குறுதே


எறிகுண்டாய் வானத்தியமன்
கூரை பிரித்துன் பின் வீட்டில்
இறங்கிய நாள்
உன் முன்வீட்டுப் பிள்ளை
தொலைந்தாளாம்
பின் ஒரு நாள் ஊர்காண
காக்கி உடையோடு வந்து
காட்டோரம் பூ ப்பறித்து
கூந்தலிலே சூடி நடந்தாளாம்......
தெருவெல்லாம்
நீ உனது பூ ப்படைந்த
பெண்ணிண் காவலிலே
நிழலாய் திரிகிறியாம்....
இது பெருங்காவல்
எல்லாம் அறிந்தேன்.

எங்கிருந்தோ வந்து
நம் தெருவோர மரக்கிளையில் குந்தி
தேவதையின் கூந்தலெனத்தன்
பூ வால் அசைத்த
அந்தக் குருவியைப்போல்
காணமல் போனதடி காலங்கள்.

- வ.ஐ.ச. ஜெயபாலன்

## ஏக்கம்

யுத்த பூமியில்
நித்தம் துப்பாக்கி வேட்டுக்கள்
நியாங்கள் மருணித்து
மனித மண்டை ஓடுகளும்
மறைக்கப்படுகின்ற
இந்த இருளான பூமியில் -
உனது
முகத்தின் ஒளி மட்டுமல்ல
அகத்தின் ஒளியும்
அந்தி நிலாவின்
அழகான ஒளிக்கீற்றுக்களாய்
எனது இதயத்தை
ஆராதிக்கின்றன!



அந்தி வேளை -
எந்த மனிதனின்
இதயத்துக்கும்
இதமான வேளை!
ஆனால் -
பாதுகாப்பிற்காக
இல்லங்களுக்குப்
பயத்தோடு
பயணிக்கின்ற நேரமும்
இந்த வேளைதான்!
இவ்வேளையில் -
நீயும் நானும் நீண்ட தூரம்
படகினில் பல்லவி பாடி
சரணம் பாட முன்பே
மரணம்
வந்து விட்டால்..........

ஓ.............
இது யுத்த பூமி
சுதந்திரத்தின் கைகள்
விலங்கிடப்பட்டு சிறைப்பட்ட
நேரம்!
அதனால் -
உன்னைப் பற்றிய
ஒளியான
நினைவுகளை
இதயத்துக்குள்ளேயே
என்னால் நடைமுறைப்படுத்த
முடிகிறது!
இதனால் -
ஏக்கப் பெருமூச்சோடு
இதயச் சுவருக்குள்
வெறுமை படர்கிறது!.

முகத்தூர் சரஸ்தனா.

## காத்திருப்பேன் கல்லறையில்

பெண்ணே!
என்னை மீறி
வந்த அன்புக்குக் கூட
உன்னை அடைகிற
சக்தி இல்லாமல்
போனபோது தான்
நான்
மீண்டும் மௌனமாகிப்
போகிறேன்.

எனக்காக பூ ப்பதில்
பெருமைப்பட்ட
ரோஜாவொன்று
பணத்திற்காக
பூ க்க......
சம்மதித்து விட்டது.

போதுமென்ற மனதை
விட......
பொல்லாத பணமே...

உலக அமைப்பில்
உயர்ந்ததென
கண்டு கலங்கினேன்.

போதுமென்ற மனம்
காதலை புனிதப்
படுத்துகின்றது.— அது
இறக்கும் வரைக்கும்
இரக்கத்தை
கொள்வனவு
செய்யும்.

அன்பு காதலை
சுத்தம் செய்யும்
சிரித்துக் கொள்ளும்
சந்தர்ப்பத்தை
சரித்திரமாக்கும்

பொல்லாத பணம்
காதலை உடைத்து
'பணம் இல்லாதவன் பிணம்'
என்ற கல்லறை
வாசகம் பொறிக்கும்

அப்போது அமைதியாய்
உன் காதல்
வெற்றி பெற
வாழ்த்துகளோடு
காத்திருப்பேன்
கல்லறையில்.

~நிந்தவூர் அஷ்ரப்~

## சுதந்திர முகாம்

சுதந்திரத்தைக் கொண்டாட
பகிரங்க அறிவித்தல்கள் செய்து
கூட்டங்கள் சேர்க்க வேண்டிய
அவசியம் எமக்கில்லை
நாங்கள் எல்லோரும்
கூட்டம் கூட்டமாகத்தான்
சேர்ந்திருக்கின்றோம்
மேடைகளின் முன்னால் - அல்ல
சிறைச்சாலைகளிலும்
அகதி முகாம்களிலும்.

கவிகரன்

கல்முனையில் எமது
விற்பனை முகவர்
அன்பு ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி
கல்முனை

## சுதந்திரம்....?

22கரட் என்றே?
வாங்கினோம்....
பொன்விழாவின்
பின்புதான்
புரிகிறது
தங்கமுலாம்
பூ சப்பட்ட
தகடென்று?

– ஓட்டமாவடி இஸ்மாயில் –

## அவளைப்பற்றிய, மிகநீண்ட பின்னிரவு இருட்டில்.

ரெண்டு மூன்று நாளாய்
இப்படித்தான்
முன்னிருட்டு முற்றத்தில்
நீவிக்கிடக்கு
நிலவு இருட்டடைந்து
எங்கு தான் போய்த் துலைந்ததோ?

முற்றத்தில் கொட்டிக் கிடக்கும்
கடற்கரை மணலில்
பாயை விரித்து
நீட்டி நிமிர்ந்து
மல்லாந்து படுக்கிறேன்
வெள்ளிப் பூ க்கள்
கொத்துக் கொத்தாய் பூ த்துக்
குலுங்குகின்றன
பிஞ்சு மேகந்தான் எத்தனை?
தலைதெறிக்க ஓடுகின்றன
சூ......என்னழகு
ஆகாயப்பரப்பினிடையே
எவ்வளவு அற்புதங்கள்
நீண்டு விரிந்து கிடக்கும்
நீலவிரிக்கம்பளத்தில்
எத்தனை மர்மம்
எப்படித் துலங்கும்?

திடீரென எழுந்த வெண்கொண்டல்
கண்ணுக்குள் மண்ணையிறைத்துப்
போயிற்றே
அவளிருந்தாள் இன்னேரம்
ஊதி நீவி விடுவாள்
அவள் நினைவுகள்
தொண்டைவரை நிறைந்தன.

எப்படி மறப்பேன்?
அவளின் கிளிப்பேச்சும்
அவள் தந்த ஆயிரம்
முத்தங்களையும்
கவிதை கற்றுத் தந்த விழிகளையும்
எப்படி. எப்படி மறப்பேன்?

இப்பேதெல்லாம்.
அவளில்லாத் தனிமை
என்னைக் கொன்று தான் குவிக்குதே

உடலில் ஒரு துளி கூடச்
சத்தில்லாமல்
அடித்த பாம்பாய் பாயில் சுருண்டு
படுக்கிறேன்
பக்கத்து வீட்டுக் கொய்யாவில்
சளாரென விழுந்து வௌவால்
இரைக்கும் சத்தத்தில் முழிக்கிறேன்
கனல் தெறிக்கிறது காச்சல்
வெளிக்கிளம்புது சுடுகாற்று.
பிறகுமென்ன.
அவள் நினைவுதான்
ஒன்றும் எழுவதில்லை.

ஆரையம்பதி. த.மலர்ச்செல்வன்.

## ஊசலாடும் பிரேதம்

எரிந்து தீர்ந்த
உணர்ச்சிகளின் சாம்பலிலிருந்து
எழுந்து பறக்கிறது
ஒரு 'பீனிக்ஸ்' பறவையாய்
இக்கவிதை!

உடைந்த மனசுடன்
ஊசலாடுவதன் சலிப்பில்
மரணித்தவர்களை நினைத்து
பொறாமைப்படுகின்றேன்!

சிறுநீர் கழித்து பல நாட்களாகிட்டு
குடிக்கின்ற நீர்-
அன்றாடம் அழுவதற்கே
போதாததால்....

வக்கிரங்கள்
வரம்புடைத்த போதெல்லாம்
சவர்க்கார நீரை நீரில் கலைவதாய்
என்றோ
கரைந்து முடிந்திட்டேன் நான்!

இங்கே
ஊர்ந்து திரியும் மனிதங்களிடம்
ஒரு வார்த்தையேனும்
பேசிப்பாருங்கள்!
ஒரு துளியேனும்
இதயங்களில் உயிர் இருக்கிறதா
என்று!

நான்
மரணமாகிட்டேன்!
என்றாலும் -
நாசிப்பிரதேசத்தில்
காற்றின் நடமாட்டம் நின்று
விட்டால் தானே
இந்த உலகம்
என்னைப் பிரேதம் என்று நம்பும்!

– மீராவோடை
எஸ்.நலீம்

## மீண்டுமோர் கருக்கல்

வெண்ணிறவானம்
மீண்டும் கருக்கலுக்கு
அத்திவாரமிடுகிறது.

வான மேனியின்
வெண்பஞ்சு ஆடைகள்
களையப்படுகிறது.
அடிவானத்தின்
அடித்தொண்டையிலிருந்து
முழக்கங்களைக் கக்குகின்றன!

கார்முகில் கூட்டங்கள்
ஓர் கட்டுப்பாடின்றி
முட்டி மோதுகின்றன.

இடையிடையே
எச்சரிக்கை சமிக்ஞைகள்
மின்னி மறைகின்றன!.

வெண்ணிற வானம்
மீண்டும் கருக்கலுக்கு
அத்திவாரமிடுகிறது!.

சூரிய ராஜ்ஜியத்தின் சூடான
கதிர்வீச்சு
கருமுகில்களால்
மறைக்கப்பட்டு
[illegible] ராஜ்ஜியம் காரிருளை
வரவேற்று
இருளடையப் போகிறது.

மழை மேகங்கள்
மாரி மழையை
மொத்தமாகப் பொழியப்
போகிறது!

பூமித்தாய் தாங்குமோ
தாராள மழை நீரை
தரை தாங்குமோ
கரை புரண்டு
ஓடப் போகும்
வெள்ளப் பெருக்கை!

மழை வேண்டும்
பருவ காலத்திற்கு மட்டுமே
நீர் வேண்டும்
நிலம் செழிக்க
அதுவே -
காட்டாற்று வெள்ளமானால்?

வெண்ணிற வானம்
மீண்டும் கருக்கலுக்கு
அத்திவாரமிடுகிறது.

புதுநகரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பரபரப்பு 'பேய் வதந்தி மதம் பரப்புவோர் வேலை

(நமது நிருபர்கள்)

மட்டக்களப்பு நகரிலும் அதனை அண்மித்த கிராமங்களிலும் கடந்த வாரத்தில் பரவலாக பேசப்பட்ட "பேய் நடமாட்டம்" பற்றிய செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை. இது திட்டமிட்ட ரீதியில் பரப்பப்பட்ட வதந்தி எனத் தெரிய வந்துள்ளது.

கல்லடி, ஆரையம்பதி, நாவற்குடா, புன்னைச்சோலை, கூளாவடி, மாமாங்கம், இருதயபுரம் ஆகிய கிராமங்களில் சிறு குழந்தையைப் போல் இரவிலும், பகலிலும் நடமாடுவதாகவும் அக்குழந்தையைக் கண்டு யாராவது தூக்கச் சென்றால் முகத்தில் ஓங்கி அறைந்துவிட்டு மாயமாய் மறைவதாகவும் அடிவாங்கியவர் இரத்தம் கக்கி இறந்துள்ளதாகவும் சிலர் வாயால், மூக்கால் இரத்தப் பெருக்குடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் பரவலாகப் பேசப்பட்டது.

தினக்கதிர் நிருபர்கள் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று உண்மை நிலையை அறியமுற்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளுடனும் தொடர்பு கொண்ட போது இத்தகைய சம்பவங்களில் எவரும் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த வதந்தி பரப்பப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று விசாரித்தோம்.

கல்லடி, ஆரையம்பதி, கூளாவடி, புனன்னச்சோலை, மாமாங்கம் இருதயபுரம் பகுதியில் இதுபற்றிப் பரவலாக பேசியவர்களை நேரில் சந்தித்து கேட்ட போது தாம் நேரடியாக காணவில்லை. சிலர் கதைத்தார்கள் என்றனர்.

கல்லடியில் விசாரித்த போது ஆரையம்பதியில் பேய் நடமாடியதாகக் கூறினார்கள். ஆரையம்பதியில் விசாரித்தபோது கல்லடியில் நடமாடியதாக கூறினார்கள்.

புன்னைச்சோலையில் பேய் அடித்து ஒருவர் இறந்தார் என சொல்லப்பட்டது. புன்னைச்சோலையில் விசாரித்த போது கூளாவடியில் தான் அப்படி நடந்தது என்றார்கள்.

எந்த இடத்திலும் பேய்நடமாடவும் இல்லை. யாரும் தாக்கப்படவும் இல்லை என்பதும் திட்டவட்டமான உண்மையாகும்.

இந்த வதந்தி பரப்பியவர்கள் யார் என்பதையும் எமது நிருபர்கள் மேற்கொண்ட விசாரணையிலிருந்து தெரியவந்தது.

மட்டக்களப்பில் மதம் பரப்பும் ஒரு சிலரே இந்த வதந்தியை பரப்பியுள்ளனர்.

தமது மதத்தில் சேர்ந்தால் "பேய்" பிடிக்காது எமது மதத்தில் சேர்ந்துவிடுங்கள் என இவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவர்களே பல கிராமங்களில் பேய் வதந்தியை பரப்பி வந்ததை எமது நிருபர்கள் பலருடனும் பேசியதிலிருந்து அறியமுடிந்தது.

## நிதி ஒதுக்கிய எம்பியும் இறந்துவிட்டார். தார்வீதியும் போடப்படவில்லை.

சென்ற ஆண்டு மாசி மாதம் (1997-02-25) அன்றைய திருமலை பா.உ. திரு.அ.தங்கத்துரை அவர்களால் எமது திருக்கடலூர் கிராமத்தின் நான்கு வீதிகளுக்கும் தார்போடப்பட்ட பாதை அமைக்க பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் பணம் ஒதுக்கப்பட்டது. அது பல மன்றாட்டங்கள் மூலம் பெறப்பட்டது. ஆனால் மூன்று மாதங்களின் பின் இழுபறி நிலையில் ஒரேயொரு பாதை மட்டும் முற்றாக தார் பூசப்பட்டது. ஆனால் பாதைக்கு கிரவல் போட்டு விட்டு சென்றவர்களை காணவில்லை பா.உறுப்பினர்களிடம் (தங்கத்துரை) கேட்டதற்கு அது வீதிப்புனரமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது என்றார். அமைச்சு அலுவலகத்திடம் கேட்டதற்கு கல்வரவில்லை! மண் வரவில்லை என்றே காலம் போக்கினர். இடையில் பா.உறுப்பினரும் அகால மரணமானார். இப்போது புதுவருடமும் பிறந்துவிட்டது. பாதைகள் அப்படியே இருக்கிறது! தார் போடப்படவில்லை. சம்பந்தப்பட்ட தெருக்கள் -பெருந்தெருக்கள் புனரமைப்பு அமைச்சு கவனிக்குமா?

-கலாதரன்-

## கட்டாய வேலையில் காயமடைந்த இளைஞர்

(நமது நிருபர்)

கிட்டங்கி விசேட அதிரடிப் படை முகாமில் ஞாயிறு தோறும் கைதாகி விடுதலை பெற்ற மற்றும் ஊர் இளைஞர்களும் கைஒப்பம் இட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் கிட்டங்கி அதிரடிப்படை முகாமுக்கு கைஒப்பமிட்டுச் சென்ற எஸ்.சுந்தரம் எனும் இளைஞனை அன்று மாலை நேரம் வரவழைத்து சேனைக்குடியிருப்பு பழைய நெல் சந்தைப்படுத்தும் கட்டிடத்தின் கூரைத்தகடுகளை கழற்றித் தருமாறு கூறியுள்ளனர்.

இந்நபர் தகடு கழற்றும் போது 40 அடி உயரமான இக் கட்டிடத் தினால் சறுக்கி விழுந்து சுயநினை விழந்துள்ளார். பின்னர் மேற்படி அதிரடிப்படையினர் வீதிரோந்துப் பணியில் ஈடுபட்ட வேளை மயக்க முற்றுக்கிடந்ததாக கூறி கல்முனை அரசினர் வைத்திசாலையில் அனு மதித்துள்ளனர்.

## தமிழ் இசை அரங்கம்

மட்டக்களப்பு கிழக்கிலங்கை சுவைக்காற்று கலைக்கழகத்தின் முதல் முயற்சியாக இன்று மாலை (30.01.98) பி.ப. 4.00 மணிக்க தேவநாயகம் மண்டபத்தில் "தமிழ் இசை அரங்கம்" என்ற நிகழ்வு அரங்கேறுகிறது.

சங்கீதபூஷணம் என்.இராஜு அவர்கள் பாட துணைக்கலைஞர்களான சங்கீத பூஷணம் ஜீவன் ஜோசப் வயலின் இசைக்கலா வித்தகர் வே.ஸ்ரீதரன் மிருதங்கம் மீட்டுகிறார்.

அழகு, ஆழம், எளிமை என்ற வாசகங்களைக் கொண்டு பிறப்பெடுத்திருக்கும் "விமோசனா" கலை இலக்கிய அமைப்பும் காலக்காற்றில் சருகாக மாறாமல் நிலைத்து நின்று கலைப்பணி புரிய வாழ்த்துகிறோம்.



தென் இந்தியா திருச்சிராப்பள்ளி ஜமால் முகம்மது கல்லூரி அப்துல் கபூர் அரங்கில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழக ஐந்தாவது கருத்தரங்கு மாநாட்டில் இடம்பெற்ற இலக்கிய உலகம் நூல் அறிமுக விழாவிற்கு தலைமை வகித்த பிரபல எழுத்தாளரும், கவிஞரும், நாட்டார் இலக்கிய ஆய்வாளருமான சட்டத்தரணி எஸ்.முத்துமீரானிடமிருந்து நூலின் முதற் பிரதியை கொடைவள்ளல் ஒருவர் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## சத்துருக்கொண்டான்

டார்கள். வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். கத்தியால் குத்தினார்கள். "கதறக் கதற" பக்கத்தில் இருந்த கிணற்றில் தூக்கிப் போட்டார்கள்.

அதன் பின்னர் அந்த இடத்தை விட்டு கொலைகாரர்கள் சென்ற வேளை பார்த்து முகாம் ஓரத்தில் உள்ள பற்றைக்குள் சென்று பதுங்கியிருந்தேன்.

சுமார் ஒருமணி நேரத்தின் பின் "ரயர்" ஏற்றப்பட்ட லொறி ஒன்று வந்து நின்றது. மடுவுக்குள் வெட்டப்பட்டு இறந்து கிடந்தவர்கள் மீது ரயர்களை அடுக்கினார்கள்.

அதன் மேல் பெற்றோல் ஊற்றினார்கள். சுற்றி நெருப்பு வைத்தார்கள்.

ரயர் பற்றி எரிந்து முடியும் வரையும் இராணுவத்தினர் அதனைச் சுற்றி நின்றார்கள். ரயர் எரிந்து முடிந்ததுத் அவ்விடத்திற்கு "புல்டோசர்" வந்தது. "புல்டோசரால் மடு இருந்த இடம் தெரியாது தரையை மட்டப்படுத்தியது.

எல்லாம் முடியும் வேளையில் கிழக்கு வெளிக்கத் தொடங்கியது.

அங்கிருந்து தவழ்ந்து தவழ்ந்து வீதிக்கு வந்தேன். ஒரு வயோதிபர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

நான் அவரிடம் விடயத்தைக் கூறினேன். அவர் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

நான் தப்பிய விடயம் இராணுவத்தினருக்கு தெரிய வந்ததும் அவர்கள் என்னைத் தேடினார்கள்.

அதன் பின்னர் ஆயரகத்தில் தஞ்சமடைந்தேன். எனது உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்த வணபிதா ஒருவர் பாதுகாப்பான ஓர் இடத்தில் என்னை வைத்திருந்தார்கள்.

நடந்த விடயங்களை கேட்டு ஒலிப்பதிவு செய்து கொண்டார்கள்.

இராணுவம் என்னை தேடியது. நான் அவர்களின் கண்ணில் படாது தலைமறைவாகவே சிலகாலம் இருந்தேன்.

அதன் பின்னர் மட்டக்களப்பில் நடந்த ஆணைக்குழு விசாரணையின் போதும், கொழும்பில் நடந்த விசாரணையின் போதும் சாட்சியமளித்தேன்.


அக்கிராமத்தில் பாதிக்கப்படாத குடும்பங்களே இல்லை எனலாம்.

## நூல் வெளியீட்டு விழா

மட்/ கலைமகள் அறநெறிக் கல்விப் பயிற்சிக் கல்லூரியினால் அறநெறிக் கல்வி கற்கை நெறிப் பயிற்சி கருத்தரங்கிற்கான நிதியுதவித் திட்டத்திற்கு மேற்படி கல்லூரிப் பணிப்பாளர் திரு.வை.விவேகானந்தன் அவர்களினால் எழுதி வெளியிடப்படும் "திருவள்ளுவருடைய அறக்கொள்கை" எனும் நூல் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை 30ம் திகதி மட்/ மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி மனோ சபாரத்தினம் கலந்து சிறப்பிப்பார்.

## மனமார்ந்த நன்றிகள்



இருதய அறுவைச் சிகிச்சைக்காக தென்இந்திய மானில மான சென்னையில் உள்ள "மெட்ராஸ் மெடிக்கல் மிஷன்" வைத்தியசாலையில் வெற்றிகரமாக சிகிச்சை பெற்று திரும்பிய மட்டக்களப்பு டச்பாரைச்சேர்ந்த சிவ்ஸ்டன் றாகல்(13) தனது சிகிச்சைக்காக உதவியவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை கூறுகிறார்.

இலங்கை ஜனாதிபதி கௌரவ சந்திரிகா குமாரதுங்க, மட்.பேர்கர் யூனியன், லயன்ஸ் கழகம், றொட்ரிக் கழகம், எகெட், வணபிதா போசப் ஏக்கோனிக், T.றாகல், அருட்சகோதரி எலொய்சா, எவ்ரில்டா, கெங்கா(சுவிஸ்) மாசில்லா அன்றாடோ (அவுஸ்திரேலியா) இலங்கை-அவுஸ்திரேலிய நட்புறவுக்கழகம், குலசேகரன் (சென்னை) ஈபட்றாகல் (அவுஸ்திரேலியா) மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், சி.துரைராஜசிங்கம் மற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத நலன் விரும்பிகள் ஆகியோருக்கு தனது பெற்றோர், சகோதரிகள் ஆகியோருடன் இணைந்து நன்றி தெரிவிக்கிறார்.

நன்றி

கிங்ஸ்டன் றாகல்

பெற்றோர், சகோதரிகள்.

காத்தான் குடியில்
தினக்கதிர்
விற்பனை முகவர்
நவாஸ் ரேடர்ஸ்
76, பிரதான வீதி
காத்தான்குடி

## வேட்டுக்களுடன் ஆரம்பமான வாக்களிப்பு

யாழ்.நகரில் உள்ளூராட்சி வாக்களிப்பு தினமான வியாழக்கிழமை அதிகாலையிலேயே வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

நகரிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து ஷெல்களும் ஏவப்பட்டன.

இச்சம்பவத்தில் நல்லூரில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு பெண்கள் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்

யாழ்.நகருக்கு வரும் பல பாதைகள் மூடப்பட்ட நிலையிலேயே வாக்களிப்பு ஆரம்பமானது.

வாக்களிக்க வந்தவர்கள் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை சோதனையிடப்பட்ட பின்னரே வாக்குச் சாவடிக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வாக்களிக்க வரும் ஒவ்வொருவரும் தற்கொலை குண்டுதாரிகள் என்ற தோரணையிலேயே சோதனைகள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றிவளைப்பில் அகோரம் 20 அப்பாவிகள் படுகாயம்

சுற்றி வளைப்பு, கைது, காணாமல் போதல், இவை தமிழ் மக்களுக்கு புதிய விடயங்கள் அல்ல.

இவைகளில் எத்தனை குடும்பங்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர், வறுமையில் வாடுகின்றன என்பது யாருக்கு தெரியப்போகிறது.

கடந்த 25ந் திகதி பேத்தாளையில் நடந்த சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

சம்பவதினம் காலை பேத்தாளை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் பேத்தாளை கண்ணன் கிராமம், விநாயகபுரம் பண்டிமடு பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன.

அனைவரும் பொது இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 40 பேர் உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டனர்.

உழவு இயந்திரப் பெட்டியின் உள்ளே சுமார் 20 பேர் அமர்த்தப்பட்டனர். மிகுதியாட்கள் பெட்டியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டனர்.

உழவு இயந்திரம் வேகமாகச் சென்ற வேளையில். பேத்தாளை சவக்காலை சந்தியில் உழவு இயந்திரப் பெட்டி குடை சாய்ந்தது.

சுமார் 20 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்ற இராணுவத்தினர் இதைப் பற்றி கவலைப்படவே இல்லை. பொதுமக்களாகி உதவியுடன் பலமணிநேரம் கழித்து வாழைச்சேனை வைத்தியசாலைக்கு இவர்கள் கொண்டு வரப்பட்டனர்.

படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை நமது நிருபர்கள் சந்தித்து உரையாடினர்.

பலர் நடந்தசம்பவத்தை சொல்லவே பயப்பட்டனர். சிலர் தம்மை புகைப்படமெடுக்க வேண்டாம் எனவும் தடுத்தனர்.

தாங்கள் ஏதாவது கூறி பத்திரிகையில் அது வெளிவந்தால் இராணுவத்தினர் தம்மை உயிருடன் விட்டு வைக்க மாட்டார்கள் எனப் பயந்தனர்.

அந்தப் பயத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. பட்டு நொந்து போயிருக்கும் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களாயிற்றே.

காயமடைந்தவர்களில் ஒருவர் மாரிமுத்து ஆண்டி (64 வயது) வடமுனையிலிருந்து இடம் பெயர்ந்து பண்டிமடு அகதிமுகாமில் வாழ்பவர். வடமுனையில் இனவெறியர்களின் இரைக்கு மனைவியைப் பலிகொடுத்தவர்.

நான்கு பிள்ளைகளை கூலிவேலை செய்து காப்பாற்றி வந்த இவருக்கு இடுப்பு எலும்பு முறிந்திருக்கிறது.

இனி அந்த நான்கு பிள்ளைகளின் வயிற்றுப்பசிக்கும் யார் கஞ்சி ஊற்றுவார்கள்?

முள்ளம்தண்டு முறிந்து சிகிச்சை பெற்றுவரும் கிழக்குபல்கலைக்கழக மாணவன் அழகையா சந்திரமோகனை சந்தித்தோம்.



மன்னம்பிட்டியிலிருந்து பாதிக்கப்பட்டு இங்கு வந்தோம். முள்ளம் தண்டு முறிந்ததால் 3 மாதங்களுக்கு விரிவுரைகளுக்கும் சமூகமளிக்க முடியாது. இதனால் எனது உயர்கல்வி பாதிக்கப்பட்டுவிட்டது என்றார்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகம் இச்சம்பவத்தில் கை நரம்பு உடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். கூலித்தொழில் புரிந்து குடும்பத்தை காப்பாற்றிவரும் இவரின் 3பிள்ளைகளும், மனைவியையும் நாளாந்த உணவுக்கே பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்.

எப்போதும் பாதிக்கப்படுவது ஏழைத் தொழிலாளர்களே. பாதிக்கப்பட்டவர்களை நம்பி இருக்கும் குடும்பங்களின் சம்பவத்தப்பட்டவர்கள் உணர்வார்களா?

## வவுனியாவில் புதிய கெடுபிடி

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரில் புதிய பாதுகாப்பு கெடுபிடிகள் தோன்றியுள்ளன.

கொழும்பு செல்வோர் இனிமேல் வவுனியாவில் தங்க வைக்கப்படாமாட்டார்கள். இவர்கள் மன்னாரில் வைத்தே கொழும்புக்கோ, யாழ்ப்பாணத்திற்கோ அனுப்பப்படுவார்கள்.

தேசிய அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வவுனியாவுக்குள் செல்ல அனுமதி வழங்கப்படும்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அகதிமுகாம் மூடப்பட்டு மன்னாருக்கு மாற்றப்பட்டுள்ளது.

## சைவப்பெரியார் குமாரசாமி காலமானார்

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலனசபை சாவகச்சேரி கண்ணகை அம்மன் ஆலய பரிபாலனசபை தலைவரும் இளைஞர் சேவை அதிகாரியும் சரசாலை இந்து இளைஞர் மன்ற நூல் வெளியீட்டுக் குழுத்தலைவருமான குமாரவேலுவின்- பரராசசேகரம் திடீர் மறைவு சைவத் தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும்.

இவ்வாறு வடபிராந்திய இந்துப்பேரவை வெளியிட்டுள்ள அஞ்சலிச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் காலம் சென்ற ஜி.ஜி பொன்னம்பலம் குமாரசாமி போன்ற தலைவர்கள் மீது பற்றுமிக்கவராக இருந்தார். இளமையில் இருந்து தமிழ்ப்பற்றும், ஆன்மீகப் பற்றுமிக்கவராக வாழ்ந்து பல ஆலயங்களில் ஆன்மீக உரையினை வழங்கி வந்தார். சமய நிறுவனங்கட்கு வேண்டிய நேரம் கைகொடுத்து ஆலோசனையும் வழங்கினார். துன்பம், துயரம் ஏற்பட்டபோதும் இறைவன் மீது அசையாது நம்பிக்கை வைத்திருந்தார்.

இவர் மறைவு தென்மராட்சிக்கு மட்டுமல்லாது இந்து மக்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும். என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இதயத்தில் இருந்து...

இம்முறை ஆசிரியர் தலையங்கம் தலைநிமிர்ந்து நிற்கிறது. "ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும் சிங்களக் கட்சிகள் இனப்பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் திட்டமிட்டு செயற்படுகின்றனர்." என்ற கருத்து யதார்த்தமானது. இதை தமிழ் பேசும் இனங்கள் உரத்துச் சிந்திக்கும் காலத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பேரினவாத பெருங்கட்சிகள் இரண்டும் மாறி மாறி இந்த இசைத்தட்டைத்தான் ஒலிபரப்பிக் கொண்டிருக்கும். இந்த நாறிப்போன கூக்குரலுக்கு தமிழ் பேசும் இனம் சல்லாரி போடாமல் விட்டில் சரி.

நண்பர் ஆனந்தனை நினைவுபடுத்தி "பிரியாவிடை" கதையை பிரசுரித்தமை பொருத்தமாகவே இருந்தது. எவ்வளவு கதைகளோடு "ஆனந்தன்" புறப்பட்டு பயணம் செய்தாரோ? உங்கள் தேர்வுக்கு மீண்டுமொரு சபாஷ்.

கொள்கையையும் வைத்துக்கொண்டு எல்லோருக்கும் எல்லாம் உண்டு என்ற ஜனரஞ்சகப் பாணியில் பத்திரிகையை கொண்டு செல்ல முயற்சிக்கிறீர்கள் போல் புலப்படுகிறது.

உங்கள் எண்ணங்கள் நிறைவேற. உங்களது உழைப்பு அயராது, சோராது செயல்பட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

- அன்புடன் -
ஒறுவில்.

பத்திரிகையின் முன் பகுதிக்கு நிறம் கொடுத்தால் நல்லாய் இருக்கும் என நினைக்கிறேன். கவனம் செலுத்தவும்.

துசிதா.

தினக்கதிர் மட்டுநகரில் இருந்து வெளிவருவது பாராட்டுக்குரிய விடயம் இப்பத்திரிகையின் அரசியல் அலசல்களும், சிறுகதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும், சினிமாஉலகமும் என்னை அதிகமாக கவர்ந்துள்ளன.

ரவி
கதிரவெளி

வளர்ந்து வரும் பத்திரிகைத் துறையினரிடையே மலிந்து கொண்டுள்ள பத்திரிகைகளில் "தினக்கதிர்" என் பார்வையில் ஓர் நிலையான இடத்தைப் பிடித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

தமிழ் பேசும் மக்களின் அவலங்களை அடுக்கிக் காட்டும் "தினக்கதிர்" தினம் ஒரு கதிராக பிரகாசிக்க வேண்டும் என்பதே எனது அவா.

பல்சுவை அம்சங்களோடு வெளிவரும் தினக்கதிர் வடகிழக்கிலுள்ள அத்தனை பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக செய்திகள் திரட்டப்பட்டு பிரசுரமாக்கப்பட வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

சிறுகதை, கவிதாதேசம் நமது நூலகம், இதயத்திலிருந்து போன்ற அம்சங்கள் வெகு ஜோர். தினக்கதிருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. நிலையான சுவடுகளைப் பதிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*-புதுநகரான்-*

தேனாட்டிலிருந்து இத்தனை தரவுகளையும் உள்வாங்கி பத்திரிகை ஒன்று வெளிவருவது மிகுந்த சிரமத்திற்குரிய விடயமாகும். அரச படைகளின் கைககூலிகளாக இருந்து பத்தி ரிகை நடத்துவதில் அல்லது தமிழ் குழுக்களின் அடிவருடியாக மாறி பத்திரிகை நடத்துவதும் பிரயத்தனமல்ல.

சகல தடைகளையும் நெருக்குதல்களையும் மீறி - யதார்த்தமாகி ஒழுகுவமும் யதார்த்தத்தை எழுதுவதும் கஷ்டம். காலப்போக்கில் தினக்கதிர் இப்போராட்டத்தை முகங்கொண்டு இன்னும் அதிவேகமாய் உழைக்க உறுதி பூணுமென திடமாய் நம்புகிறேன்.

ஓட்டமாவடி அறபாத்
ஓட்டமாவடி.

## யாழ் மேயராக ......

காலத்தில் அங்கிருந்து சமூக சேவைகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பருத்தித்துறை நகர சபை தலைவராக வர்த்தகர் செல்லக்கிளி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் பருத்தித்துறை பிரதேசம் இருந்த காலத்தில் அங்கு சமூக சேவைகளில் ஈடுபட்டவர்.

பருத்தித்துறையில் செல்வாக்கு மிக்க குடும்பத்தை சேர்ந்த இவர் பருத்தித்துறை முன்னாள் நகர சபைத்தலைவர் ந.நடராசாவின் உறவினராவார்.

## பேச்சுப்போட்டி

மட்டக்களப்பு இலங்கை வங்கி பொன்விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியினை நடாத்தவுள்ளது.

கனிஷ்ட, கோட்மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் மாவட்ட மட்ட போட்டியில் பங்குபற்றுவர்.

தமிழ், ஆங்கில மொழிகளில் போட்டிகள் நடாத்தப்படும்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை வங்கியின் 50 வருட சேவைகள்" என்ற தலைப்பில் இப்போட்டி நடைபெறும்.

## கூட்டணி போட்டி.........

வடமராட்சி பகுதியில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளையும், தீவுப்பகுதி பிரதேச சபைகளையும் ஈ.பி.டி.பி. கைப்பற்றியிருக்கிறது.

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்ட இரு சபைகளையும் கைப்பற்றியிருக்கிறது.

குறுகிய கால தேர்தல் பிரசாரத்தில் வெற்றி பெற்றமை மக்கள் என்றும் எமது பக்கம் தான் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது என தமிழர் விடுதலைக்கூட்டணி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

## சுதந்திர தினத்தில் போக்குவரத்து நிறுத்தம்.

(நமத நிருபர்)

சுதந்திர தினப் பாதுகாப்பு கெடுபிடிகளால் பெப்ரவரி 1ம் திகதியில் இருந்து மட்டக்களப்பிலிருந்து தூர இடங்களுக்கான தனியார் போக்குவரத்து சேவைகள் நிறுத்தப் படவுள்ளதாக தனியார் பஸ் சொந்தக்காரர்கள் தெரிவித்தள்ளனர்.

இ.போ.ச பஸ் சேவையும் சுதந்திர தினத்தன்று நிறுத்தப் படலாமென தெரியவருகிறது.

இதனால் சுதந்திர தினப் பொன்விழா நாட்களில் தபாற் சேவை உட்பட அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம் அடையவுள்ளன.

## மூதூரில் இளைஞர் கொலை முகமூடி அணிந்தவர்களின் கைவரிசை

-மூதூர் நிருபர்-

மூதூரில் கடந்த 24ந் திகதி இரவு 10.30 மணியளவில் ரி.வி.பர்த்துக் கொண்டிருந்த ந.மோகனநாதன் என்ற இளைஞர் முகமூடி அணிந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புலிகளுக்கு உதவி வருபவர் என்ற குற்றச்சாட்டிலே இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சொல்லப் படுகிறது. இராணுவ கட்டுப்பாடற்ற சம்பூர் பகுதியைச்சேர்ந்த இவர் மூதூரில் உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்து கல்விகற்று வந்தார்.

இம் மர்மக்கொலையடுத்து மூதூரில் பதட்டம் நிலவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்கதிர்
வார வெளியீடு
THINAKKATHIR WEEKLY

P.O. BOX -06
6, St. Michael Street,
Batticaloa.
Srilanka.
phone:-065-23055

# கிழக்கில் சகல சபைகளுக்கும் போட்டியிட கூட்டணி ஆர்வம்

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் பட்சத்தில் சகல சபைகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடுவதற்கான முஸ்தீபு நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ் குடா நாட்டில் தாம் போட்டியிட்ட இரு சபைகளிலும் வெற்றியீட்டியதையடுத்து கிழக்கில் சகல சபைகளுக்கும் தாம் போட்டியிட வேண்டுமென கூட்டணி ஆர்வம் கொண்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவில்லை.

அத்தேர்தலை கூட்டணி பகிஷ்கரித்திருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் பகிஷ்கரித்திருந்தது. ரெலோ,புளொட் ஆகியன கூட்டாகவே சுயேற்சைக் குழுவாக போட்டியிட்டன.

இக்கூட்டு தற்போது உடைந்துள்ளது. கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமானால் சகல தமிழ் கட்சிகளும் தனித்தனியாகவே தமது கட்சி சின்னங்களில் போட்டியிட எண்ணியுள்ளனர் என அக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த தடவை கிழக்கில உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரித்த ஈ.பி.ஆர்.எல்.எவ், த.வி. கூ. ஆகியன இம்முறை ஆர்வத்துடன் போட்டியிட் முனைந்துள்ளன.

# விடுதலைப் புலிகளுக்கு தடை

## மரபு வழித்தலைமைகளின் சுயரூபத்தை வெளிக்காட்டிய ஜனாதிபதி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. கடந்த திங்கள் நள்ளிரவிலிருந்து இத்தடை உத்தரவு அமுலுக்கு வருவதாக அரசு பிரகடனப்படுத்தியிருக்கிறது.

அசைசின் இந்த அறிவிப்பின் மூலம் இனப்பிரச்சனையை சமாதானமாக பேசித்தீர்ப்பதற்கான கடைசி வழியும் மூடப்பட்டு விட்டது.

சமாதான பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் எனக் கூறிவந்த அரசு தானே சமாதான வழியையும் இறுக மூடி இருக்கிறது.

இதுவரை காலமும் இலங்கையில் இனப்பிரச்சனை ஒன்று உள்ளதென்றும் அதை யுத்தத்தின் மூலம் அன்றி சமாதானமாவே தீர்க்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு யுத்தத்திலேயே காலத்தைக் கடத்திய அரசின் இந்த அறிவிப்பானது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் போக்கடித்துள்ளது.

இதன் மறுபக்கத்தில் ஐக்கிய முன்னனி அரசின் இதுவரை காலமும் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுயரூபம் வெட்டவெளிச்சமாகியுள்ளது. காலம் காலமாக இனஒடுக்குமுறையையும், தமிழ் மக்களை நசுக்குவதையுமே தனது அரசியலின் அடிநாதமாகக் கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மரபுவழித் தலைமையைத் தற்போது ஜனாதிபதி ஏற்றுள்ளார் இலங்கை ஜனாதிபதி தான் எந்தவிதத்திலும், தன் முன்னோருக்கு சளைத்தவரல்ல என்பதை வெளிஉலகுக்குக் காட்டியுளனர்.

இலங்கையின் இனப்பிரச்சனை பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்கப்படவேண்டும் என்று கூறிக் கொண்டே சமாதானப்புறாவின் சிறகுகளை அரசு வெட்டி வீழ்த்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதை தவிர இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேறு வழி கிடையாது என்பதை நன்கு உணர்ந்து கொண்டே புலிகளை இலங்கையில் தடைசெய்திருக்கும் நடவடிக்கையானது இலங்கை அரசுக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தற்போதைக்கு நாட்டம் இல்லை என்பதைத் தான் புலப்படுத்தியிருக்கின்றது. பல்வேறு வழிகளில் தன்னை முற்போக்கு அரசாங்கமாகக் காட்டிக் கொண்ட சந்திரிகா அரசு கடைசியில் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு முன்னால் அடிபணிந்து விட்டது.

கடந்த கால ஐ.தே.க. அரசுகள் செடிகள், புல் பூண்டுகள் என இனவாதம் பேசினாலும் புலிகளைத் தடைசெய்ய முன்வரவில்லை. ஆனால் இந்த அரசு தன்க்குள்ளேயே இனப்பிரச்சனை தொடர்பான விடயங்களில் பிளவு



பட்டுப் போய், ஒருமித்த கருத்தை அடைய முடியாத நிலையில், பௌத்த சிங்களவாதிகளினதும், தமிழ் மக்களை ஆயுதப் போராட்டம் என்ற பெயரில் அழித்தொழித்து தமிழ் மக்களின் தேசியத்தை சிதற வைக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நின்றவர்களின் கைகள் மேலோங்கிய நிலையில் தலதாமாளிகை தாக்குதலை சாட்டாகக் கொண்டு புலிகளைத் தடைசெய்வதாக அறிவித்துள்ளது. எப்பொழுதுமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் மக்களுக்கு நன்மை செய்ததாக வரலாறு இல்லை. அவர்களுடைய கடந்த கால அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால் இதற்கு பல

தனஞ்சயன்

சான்றுகள் கிடைக்கும்.

புலிகளின் செயற்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் பல நிறுவனங்கள் புலிகளைத் தடை செய்ததை வரவேற்றுள்ளதாக அரசு பிரசாரம் செய்கின்றது. நிச்சயமாக அவ்வாறு ஆதரவு தெரிவிப்பவர்கள் எல்லோருமே பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை இந்நாட்டில் வலியுறுத்துபவர்களாகத்தான் இருப்பார்கள். புலிகளை தடை செய்த அறிவிப்பைத் தொடர்ந்து, இந்த அரசின் நடவடிக்கைகள் நிச்சயமாக புலிகளை அழித்தொழிக்கும் வேலைகளில் தான் முழுமூச்சாக இருக்கும். ஆனால் பாதுகாப்பான அரண்களைக்கூட தமது சாதுரியத்தினால் தாண்டி விடும் புலிகளின் நடவடிக்கைகளை எவ்வித்திலும் கட்டுப்படுத்துவதாக இருக்கப்போவதில்லை. மாறாக புலி அழிப்பு என்ற பெயரில் ஏற்கனவே அல்லல்பட்டு இருக்கும் தமிழ் மக்களைத்தான் மேலும் வற்புறுத்த வைக்கப் போகின்றன.

இதுவரை காலமும் தீர்வுப் பொதியை வைத்து நடாத்திய அரசியலைக்கூட இந்த அரசு இனிமேல் கைவிடவேண்டி ஏற்படும். இலங்கைக்கு புதிய பிரதமர் ஒருவரைத் தேடவேண்டிய கால கட்டம் உள்ள இந்த தேர்தலில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றமானது பொதுஜன ஐக்கிய முன்னனிக்குள் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியே தீரும். ஏற்கனவே இனவாதத்தை அடக்கி வாசித்த தலைவர்கள் கூட இனிமேல் வீறு கொண்டு எழுகின்ற கட்சிகள் நிறையவே இடம் பெறும்.

இதே வேளை பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தான் இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார். அவரை இராஜினாமா செய்யவேண்டாம் என சிங்கள மக்களும், பிக்குகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும், ஜனாதிபதி இந்த இராஜினாமாவை ஏற்றுக் கொள்ளமாட்டார் என அரச பிரசார சாதனங்கள் தெரிவித்திருக்கின்றன. இந்த இராஜினாமா ஒரு நாடகம் என்றும் இந்நாடகத்தில் அனுருத்த மீண்டும் பதவி ஏற்பதுடன் அடுத்த கட்சிகளில் பிரதமர் பதவியையும் ஏற்கலாம் என நம்பப்படுகிறது.

சமாதான பேச்சுகளுக்கான கதவுகள் திறந்தே உள்ளன. புலிகள் தான் சமாதான பேச்சுக்கு வரமறுக்கின்றனர் என கூறிவந்த அரசு தானே சமாதான கதவுகளை இறுகமூடியிருக்கிறது.

இனிவரும் காலங்கள் வடக்கு கிழக்கு மட்டுமல்ல தென்பகுதிகளும் யுத்தகளமாக மாறப்போகின்றன. சமாதான கோஷத்துடன் பதவி ஏற்ற அரசு தன் பதவிக்கால முடிவில் இந்த நாட்டில் மனித மண்டை ஓடுகளையும் தீர்ந்து போன தோட்டாக்களையும் தான் மிஞ்சவைக்கப் போகிறது.

## மட்டக்களப்பிலும் ஏற்பாடு

(நமது நிருபர்)

மட்டக்களப்பிலும் சுதந்திரப் பொன்விழாவுக்கான ஏற்பாடுகளை கச்சேரி நிர்வாகம் செய்து வருகிறது. கோலாகலமான ஏற்பாடுகள் எதுவும் இல்லாத போதும் தேசியகீதம் இசைத்தல், தேசியக் கொடி ஏற்றல், அதிதிகள் உரைகள் என்பன இடம்பெறும் எனத் தெரிய வருகிறது.

தபால் தொலைத் தொடர்பு தகவல் துறை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என அறிவிக்கப் படுகிறது.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கடந்த இருமாதங்களாக பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு மட்டக்களப்பு விஜயத்தை ரத்துச் செய்திருந்தார். இவர் கலந்து கொள்வதாக இருந்த சில வைபவங்களும் ரத்துச் செய்யப்பட்டு இவரின் வருகைக்காக காத்திருந்தன.

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்தியின் பரிசளிப்பு விழா பிரதியமைச்சருக்காக இரு முறை ரத்துச் செய்யப்பட்டது.

**வரி விளம்பரம்**

*இலவசம்*

சிறு வரி விளம்பரங்கள் இலவசமாக பிரசுரிக்கப்படும். 20 சொற்களுக்கு உட்பட்ட வரி விளம்பரங்களை பிரசுரமாக வேண்டிய தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். 20 சொற்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் 5ரூபா செலுத்த வேண்டும்.

- பிரதம ஆசிரியர் -

## உதிரிப்பாகங்கள் இல்லை

(யாழ் நிருபர்)

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு இரு கப்பலில் 85 பஸ் வண்டிகள் தென்னிலங்கையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

இவைகள் அனைத்தும் தென்னிலங்கையில் நீண்டகாலம் பாவிக்கப்பட்ட பழைய பஸ்கள் எனக் கூறப்படுகிறது. இவைகளில் 20 பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது.

ஏனையவை கட்டையில் ஏற்றப்பட்டுள்ளன. இவைகளை திருத்துவதற்கு நான்கு கப்பலின் உதிரிப்பாகங்கள் தேவை என யாழ் டிப்போ பொறியியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பழைய பஸ் வண்டிகளை அனுப்பியதால் டிப்போவில் இட நெருக்கடிதான் ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்தப் பிரயோசனமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமா

# ஓர் அரசியல் நாடகம்

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தது ஓர் அரசியல் நாடகம் எனச் சொல்லப்படுகிறது.

மக்கள் ஆதரவு அவருக்கு உண்டு எனக் காட்டுவதில் அரசு காட்டும் ஆர்வமும் பிரச்சாரமும் இதனை எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

இந்த அரசியல் நாடகத்தில் அமைச்சர் அனுருத்த அவர்களுக்கு பல வெற்றிகள் கிடைத்திருக்கின்றன.

சுதந்திரப் பொன் விழாவுக்கு முன் யாழ் பாதை திறக்கப் படும் என்றும்- கொழும்பிலிருந்து தரைவழியாகச் சென்று யாழ்ப் பாணத்தில் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றப் போவதாகவும் சவால் விட்டிருந்தார்.

அவர் சவால் விட்டது போல் ஜயசிக்குறு வெற்றியளிக்கவில்லை

ஆனால் அனுருத்த பிரதியமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததன் மூலம் அவரின் சவால் காற்றோடு அடிபட்டு போயுள்ளது.

இவ்வாறு பல இராணுவ ரீதியான தோல்விகளை மறைப்பதற்கும் ஐ.தே.கட்சியினரின் எதிர் கோசங்களை அடக்குவதற்கும் அவரின் இராஜினாமா வெற்றியளித்திருக்கிறது.

அத்தோடு இந்த அரசாங்க காலத்தில் பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அது அனுருத்த அவர்கள் தான் என்பதும் நிருபணமாயிருக்கிறது.

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை சுதந்திர பொன்விழா கொண்டாட்டம் முடிந்த கையோடு அல்லது அதற்கு முதல் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை பொறுப்பேற்பார் என்பது உறுதி என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் மட்டக்களப்பு [illegible] அச்சகத்தில் 1998 ஜனவரி 31ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது